Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 வைகாசி-26 09-06-2005 வியாழக்கிழமை ஓசை 111


கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123, பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464

இல:194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987

(சி-12120)

## ஐ.தே.க.விடம் ஆட்சியை ஒப்படைக்கவோ அல்லது தேர்தலைச் சந்திக்கவோ தயார்!

### —அமைச்சர்கள் மத்தியில் சந்திரிகா அறிவிப்பு

அரசிலிருந்து ஜே.வி.பி. விலகினால் ஐ.தே. கட்சியிடம் ஆட்சியை ஒப்படைக்கவோ அல்லது தேர்தலைச் சந்திக்கவோ தயார் என்று சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க பேசியதாவது;

பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட இனி மேலும் காலம் கடத்த முடியாது. பொதுக் கட்டமைப்புத் தொடர்பான உடன்படிக்கை விரைவில் கட்டாயமாக கைச்சாத்திடப்படும். அதற்கான திகதியை இனிமேலும் ஒத்திப்போட முடியாது.

பொதுக்கட்டமைப்பானது அரசியல் கட்சிப் பிரதிநிதிகளினால் கைச்சாத்திடப்பட்டு இணக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் வோஷிங்டனில் அவசரக் கூட்டம்

### — சிறிலங்கா அரசிற்கு அழைப்பில்லை

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் தலைவர்களின் கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி வோஷிங்டனில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு அமெரிக்க இராஜாங்க திணைக்களம் அழைப்பு விடுத்துள்ளது. அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் நிக் பான்ஸ், இலங்கைக்கான ஜப்பானின் விசேடப் பிரதிநிதி யசூசி அகாஷி,நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன், ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் ஆகியோர் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

2003 ஆம் ஆண்டு நடைபெற்ற டோக்கியோ மாநாட்டின் பின்னரே இந்த உதவி வழங்கும் நாடுகளின் தலைவர்களின் சபை நியமிக்கப்பட்டது. பொதுக்கட்டமைப்பு, சமாதான நடவடிக்கைகள் மற்றும் வெளிநாட்டு உதவிகள்

(12ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்பு உருவாவதைத் தடுப்போம்

# அதனை மீறி உருவானால் அரசு கவிழும்

## பாராளுமன்றில் ஜே.வி.பி எச்சரிக்கை

(கொழும்பு)

**பொதுக்கட்டமைப்பை சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க ஏற்படுத்துவதை நாங்கள் தடுப்போம். அப்படியும் அது உருவானால் அரசு கவிழும் என்று பாராளுமன்றில் ஜே.வி.பி எச்சரித்துள்ளது. பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக தமது கட்சியின் நிலைப்பாட்டை முதல் முறையாக ஜே.வி.பி பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தியிருக்கிறது. இதனால் சிறிலங்கா அரசு விரைவில் கவிழும் என்று கூறப்படுகிறது.**

பாராளுமன்றத்தில் ஜே.வி.பியின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச பேசியதாவது;

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான ஆழிப்பேரலை மீளமைப்புக்கான இப்பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக கூட்டணிக் கட்சிகளுடன் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆலோசனை நடத்தவில்லை.

இந்த நாட்டுக்குத் தேவை பிரிவினைவாதத்தைத் தோற்கடிக்கிற அரசுதான். பிரிவினைவாதத்தை ஊக்குவிக்கும் அரசு அல்ல. எதிர்வரும் நாட்களில் நாங்கள் முக்கிய முடிவுகளை அறிவிக்கவிருக்கிறோம். எங்களுக்கு இந்த நாடுதான் முதன்மை. அரசு இரண்டாம் பட்சம்தான். சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சர்வாதிகார மனப்பான்மையுடன் நடந்து கொள்கிறார் அவரது முயற்சிகளை நாங்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பை எதிர்த்து ஜே.வி.பி இன்று முதல் மக்களிடையே பிரச்சாரம்

பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பது குறித்து மக்களுக்கு விளக்கமளிக்கும் தினமாக இன்று வியாழக்கிழமையை மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) அறிவித்துள்ளது.

பொதுக்கட்டமைப்பை மக்கள் விடுதலை முன்னணி எதற்காக எதிர்க்கிறது என்பது பற்றி அக்கட்சி உறுப்பினர்கள் நாடு தழுவிய அளவில் விளக்கம் அளிக்கும் பத்தாயிரம் கூட்டங்களுக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய பிக்குகள் முன்னணி சாகும்வரை உண்ணாவிரதம்!

### — கொழும்பில் நேற்று ஆரம்பம்

பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து தேசிய பிக்குகள் முன்னணியின் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுக் கொழும்பில் தொடங்கியுள்ளது.

கொழும்புக் கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக ஆரம்பமாகியுள்ள இப்போராட்டத்தில் பிக்குகள் முன்னணியின் அமைப்பாளர் கலவெல்கல சந்தலோக்க தேரர், அதன் ஆலோசகர் அத்தனகலரத்னபால உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கருணாவின் சதி முறியடிப்புச் சமரில் மூன்று போராளிகள் வீரச்சாவு

11.04.2004 அன்று தேசத்துரோகி கருணாவின் சதிமுறியடிப்புச் சமரில் மூன்று போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

**வீரவேங்கை- ஆழவூரான்**

(மகேந்திரன்-திலகராசா) முனைக்காடு-7 வடக்கு, கொக்கட்டிச்சோலை மட்டக்களப்பு)

**வீரவேங்கை-கயலவன்**

(இரத்தினம்-அருட்செல்வன் கடுக்காமுனை கொக்கட்டிச்சோலை மட்டக்களப்பு)

**வீரவேங்கை -நங்கைச்செல்வி**

(யோகமானி-யோகேஸ்வரி இந்துள் கரடியனாறு மட்டக்களப்பு)

(12ஆம் பக்கம் பார்க்க)

## தேச விரோதிகளின் தாக்குதலில் இரு போராளிகள் வீரச்சாவு

அம்பாறை மாவட்டம் தாண்டியடியில் வைத்து நேற்று தமிழீழ விடுதலைப்புலிகளின் இரண்டு உறுப்பினர்கள் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் தேசவிரோதிகள் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவடைந்துள்ளனர்.

கஞ்சிகுடிச்சாறு வந்தாறு மூலையூடாக தாண்டியடி நோக்கி வந்து கொண்டிருந்த போதே சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் தேசவிரோதிகள் மறைந்திருந்து இவ்விருபோராளிகளையும் தாக்கியதாக மட்டு அம்பாறை மாவட்டதுணை அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் கூறியுள்ளார்.இதேவேளை இச்சம்பவம் தொடர்பாக இலங்கை போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## திருமலையில் இருபோராளிகள் கைது!

(திருமலை)

திருகோணமலை கடற்பரப்பில்வைத்து சிறிலங்கா கடற்படையினரால் இரண்டு போராளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று நடைபெற்ற இச்சம்பவம்பற்றி திருகோணமலை மாவட்ட அரசியல்துறையினர் இலங்கைப் போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழுவினரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

## திருமலையில் குவிக்கப்பட்ட படையினரை படிப்படியாக அகற்ற அரசு இணக்கம்

### - த.தே.கூ.போராட்டம் இடைநிறுத்தம்

(கொழும்பு)

திருகோணமலை நகரில் தேவைக்கு அதிகமாகக் குவிக்கப்பட்டிருந்த இராணுவத்தினரை படிப்படியாக அகற்றுவதற்கு சனாதிபதி அனுமதி வழங்கியதை அடுத்து பாராளுமன்ற அமர்வுகளை குழப்பும் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தமது போராட்டத்தை இடைநிறுத்தியுள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கட்சித்தலைவர்கள் மாநாட்டில் வைத்து பிரதிஅமைச்சர் டிலான் பெரேரா திருகோணமலையில் தேவைகதிகமாகக் குவிக்கப்பட்டிருக்கும் இராணுவத்தினரை படிப்படியாக அகற்றுவதாக உறுதி அளித்ததை அடுத்தே தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசெப் பரராஜசிங்கம் தமது போராட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாகக் கூறியுள்ளார்.

அவர் இது தொடர்பாக நேற்றுக்கூறுகையில்; திருமலையில் தேவைக்கு அதிகமான இராணுவத்தினர் அங்கு நிலைகொண்டிருப்பதை

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் போக்குவரத்து நெருக்கடிகளுக்கு தீர்வுகாண முயற்சி மேற்கொண்டுள்ளோம்

### — போ. நி.க.குழு பேச்சாளர்

தமிழீழ விடுதலைப்புலிகளின் தரை மற்றும் வான் வழிப்போக்குவரத்து என்பவை தொடர்பில் ஏற்பட்டுள்ள முரண்பாட்டு நிலையை தவிர்க்க முயற்சிப்பதாக போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழு நேற்று தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்துரைத்த போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒல்ப்ஸ்டோட்டிர் கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு. ப.தமிழ்ச்செல்வன் நேற்று முன்தினம் இந்த விடயம் குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவினரிடம் விளக்கமளித்தார்.படைத்தரப்பின் இந்த நடவடிக்கை காரணமாக கடந்த வார இறுதியில் தமது சில பயணங்கள் இரத்துச்செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.இதனையடுத்து இது தொடர்பாக நேற்றுக்காலை அரசாங்க சமாதான செயலருடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் குறித்த பிணக்குக்கு தீர்வுகாணும் முனைப்புகளை தாம் மேற்கொண்டு வருவதாகவும் ஒல்ப்ஸ்டோட்டிர் தெரிவித்தார். (32)

# கண்ணீர் அஞ்சலி

முன்னாள் மருத்துவபீட பீடாதிபதியும், சமூதாய மருத்துவத்துறைத்தலைவரும் எமது மதிப்பிற்குரிய ஆசானுமாகிய.

பேராசிரியர்

## செல்லத்துரை சிவஞானசுந்தரம் (நந்தி)

அவர்களின் மறைவையிட்டு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரது மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி.12193)

மருத்துவ சங்கம்,
கிளிநொச்சி.

# சாவு அறிவித்தல்

## விசுவநாதன் சுப்பிரமணியம்

கச்சாய் வடக்கை நிரந்தரமுகவரியாகவும், உடையார்கட்டுத்தெற்கு உடையார்கட்டில் தற்பொழுது வசித்து வருபவருமாகிய விசுவநாதன் சுப்பிரமணியம் 07.06.2005 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவநாதன் நாகமுத்து ஆகியோரின் அன்பு மகனும், அருணாசலம் தங்கமுத்து ஆகியோரின் மருமகனும். சேதுப்பிள்ளையின் கணவரும், தவமணி, கனகசிங்கம், சின்னத்தம்பி, தியாகராசா முத்தம்மா (சுவிஸ்), சிவசோதி, இரத்தினசிங்கம், சுந்தரமூர்த்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகராசா, மகேஸ்வரி திலகமணி, தங்கரத்தினம், விஸ்வலிங்கம் (சுவிஸ்), குமரலிங்கம், சாந்தமலர் ஆகியோரின் மாமனாரும் ஜெகதீஸ்வரன், ஜெயச்சித்திரா, ஜெயபாலன், ஜெயச்சந்திரன், நிரோஜினி (லண்டன்), நிலாகரன் (கனடா), நிவேதிகா, பிரசாந், மதீசன், மஞ்சுதன், மயூரன், மயூரன் மயூரதி, திலக்ஷனா, திலோஷனா, கவிஷா, சுதாகரன், சுரேஸ், கோகிலவாணி, விஸ்வரூபன், நிருபன், தவரூபன், ரேஜனன் தேஜன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார் அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (09.06.2005) முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உடையார்கட்டு இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(சி.6244)

## முல்லையில் மீண்டும் க. கூ.ச வங்கி

முல்லை. மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க வங்கி மீண்டும் பழைய இடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக முல்லை. மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தின் சமாசத்தலைவர் அ.மரியராசா தெரிவித்துள்ளார்.

மேற்படி வங்கியானது சுழற்சி முறையிலான கடன் திட்டம் கடற்றொழிலை மேம்படுத்தும் கடன் திட்டமென பல சேவைகளை ஆற்றி வந்தது இந்த வங்கி கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் போது முற்று முழுதாக அழிந்த நிலையில் மீண்டும் புனரமைக்கப் பட்டு சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது. (20)

# வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

இல.405, ஜெயந்திநகரில் வசிக்கும் கோபால் குகதாசன் என்பவரது குடும்பதிவு அட்டை பாஸ்ஒப்பிஸ்சுக்கும் நிமலன் புகைப்படக்கலையகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்கப்படுகின்றார். (6245)

### வீடு விற்பனைக்கு

முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்திற்கு முன்ஒழுங்கையில் உள்ள 2ஏக்கர் காணியுடன் பெரிய கல்வீடு, கிணறு, மலசல கூட வசதிகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்புக்கு:- திருமதி:பூமணி-தர்மலிங்கம், 3 ஆம்வட்டாரம், முள்ளியவளை. (6166)

### தவறிவிட்டது

தருமபுரத்தைச் சேர்ந்த தி.பாலசுப்பிரமணியசர்மா என்பவரது அடையாள அட்டை 490861904-V, பயணஅனுமதி அட்டை என்பன பளைக்கும், தருமபுரத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்கப் படுகின்றார். (6742)

### தவறிவிட்டது

வட்டக்கச்சியில் வசிக்கும் டார்வின் போஸ் நளாயினி என்பவரது நிரந்தர பயணஅட்டை வட்டக்கச்சி சுகுணா புடவைக் கடைக்கும், மாவடி அம்மனுக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது சுகுணா புடைவைக்கடையில் ஒப் படைக்குமாறு கேட்டுக் கொள்கின் றோம். (6235)

# சாவு அறிவித்தல்

## வீரபாகு இந்திரகுமார்

பூநகரி தம்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்ட வீரபாகு இந்திரகுமார் கொழும்பில் அகால மரணமானார். இவர் வீரபாகு தனலட்சுமியின் அருமைமகனும், சந்திரலோகா, கமலரஞ்சினி, சகிலா, ரஜனி, அஜந்தா ஆகியோரின் அன்புச் சகோதரனும். யசோக்குமார், சற்குணநாதன், கேதீஸ்வரன் (காவல்துறைஉறுப்பினர்) ஆகியோரின் அன்புமைத்துனரும், விஜயரட்ணம் (பிரான்ஸ்), மார்க்கண்டு (பிரான்ஸ்), சிவகுரு (மல்லாவி), கருணாகரன்(தம்பிராய்) ஆகியோரின் மருமகனும், ஜெயபுரத்தில்வசிக்கும் திரு.பொ. தங்கராசா (சமாதானநீதவான்)அவர்களின் அன்புப் பெறாமகனும் ஆவர். இவரின் தகனக்கிரியை 09.06.2005 இன்று 12.00மணிக்கு தம்பிராய் உயிலங்காடு மயானத்தில் இடம்பெறும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
பொ.தங்கராசா,
(சமாதான நீதவான்),
ஜெயபுரம்.

(சி.12196)

# சாவு அறிவித்தல்

## கந்தையா பாக்கியம்

நாகர்கோவிலைப் பிறப்பிடமாகவும், 62/2 திருவையாற்றை வசிப்பிடமாகவும்கொண்ட கந்தையா பாக்கியம் அவர்கள் 08.06.2005 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றகிராமஉத்தியோகத்தர் கந்தையா அவர்களின் அன்பு மனைவியும், தவமணிதேவி, சிவராசா (வீரகேசரி கொழும்பு), மயில்வாகனம், கணேசலிங்கம் ஆகியோரின் அன்புத்தயாரும், செல்வகுலசிங்கம்(திருவையாறு), பரமேஸ்வரி, புஸ்பவதி (பிரதேசசெயலகம்,பளை), லலிதாதேவி (பதில் ஆயுள்வேதவைத்தியர் பிரதேசசபை) ஆகியோரின் அன்புமாமியாரும், வசந்தகௌரி(ஆசிரியை, கிளி.கனகபுரம் ம.வி), சுகந்தன், தர்சினி, வினோஜினி-செல்வா, நிசாந்தினி, பிரதீபா, பிரதீபன், கீர்த்திகா, சாருகா, விதூசிகா, சிவானுசன், யதுர்சன், லம்போசிகன் ஆகியோரின் பேத்தியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 09.06.2005 இன்று அவரதுஇல்லத்தில் நடைபெற்று மாலை 4.00 மணி அளவில் பூதவுடல் இரணைமடு இந்துமயானத்தில் தகனம் செய் யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:—
சி.செல்வகுலசிங்கம்,
மருமகன்.

(6246)


# புதுக்கடை திறப்பு விழா அழைப்பு

யாழ்.கொழும்பு-கிளிநொச்சி போக்குவரத்து சேவையின் முன்னோடிகள்

எஸ்வரன் ரேடிங்கோ

நிகழும் மங்களகரமான பார்த்தீப வருடம் வைகாசிமாதம் 26 ஆம் நாள் (09.06.2005), வியாழக்கிழமை காலை 9.40 மணிமுதல் காலை 10.20 மணிவரையுள்ள கடகலக்கின சுபவேளையில்.

இல:132, டாம் வீதியில் இயங்கிவந்த ஈஸ்வரன் ரேடர்ஸ் என்னும் எமது நிறுவனம்

## ஈஸ்வரன் ரேடிங்கோ

எனப்பெயர் மாற்றம் செய்யப்பட்டு, 201 B.டாம் வீதி.கொழும்பு~12எனும் இடத்தில் புதிதாக ஆரம்பிக்கவுள்ளதால்.

அத்தருணம் தாங்களும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

உரிமையாளர்கள், ஊழியர்கள்.

மற்றும் மிகக்குறைந்த கட்டணத்தில் உங்கள் பொருட்களைத் தேவையான இடத்தில் மிகக்குறுகிய நேரத்தில் விரைவாகப் பெற்றுக்கொள்ள ஒரே நிறுவனம்.

பொதிகள் பொறுப்பேற்கும்இடங்கள்:
* இல: 201 B.டாம்வீதி, கொழும்பு-12
தொலைபேசிஇல: 0114 714 312, 0777674119.
* இல: 69, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்,
தொலைபேசி. 021 222 2813, 021 222 33090 021 222 3046.

(சி.12194)

# ஏழு நிமிடங்களில் நான்கு குண்டு வெடிப்பு

# ஈராக்கில் 18 பேர் பலி; 40 பேர் படுகாயம்

(பாக்தாத்)

**ஈராக்கில் நேற்றுமுன்தினம் நடந்த நான்கு வெடிகுண்டு சம்பவங்களில் மூன்று பொலிசார் உட்பட18 பேர் கொல்லப் பட்டனர். 40 பேர் படு காயமடைந்தனர்.**

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தி லிருந்து 240 கிலோமீற்றர் தொலைவில் ஹவிஜா என்ற நகரம் மீதும் பகாராவிலும், தீவிரவாதிகள் நேற்று முன்தினம் ஏழு நிமிடங்களுக் குள் நான்கு வெடிகுண்டுத் தாக்குதல் களை நடத்தினர். ஹவிஜாவில் வீதியோரம் வைக்கப்பட்ட வெடிகுண்டு வெடித்ததில் பலர் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நடந்த சில நிமிடங்களில் பகாரா சோதனைச் சாவடி அருகே மனித வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. மூன்று கார்களில் வந்த தீவிரவாதிகள் சோதனைச் சாவடி அருகே வந்ததும் அடுத்தடுத்து வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தனர். நான்கு வெடிகுண்டு சம்பவங்களிலும் மூன்று ஈராக் பொலிசார் உட்பட 18 பேர் கொல்லப்பட்டனர். 40 பேர் காயமடைந்தனர்.



பாக்தாத்திற்கு 80 கி.மீ மேற்கே உள்ள கபானியாவில் ஒரு கார்க்குண்டுத் தாக்குதல் நடைபெற்ற இடத்திற்கு அண்மையாக ஒரு முகமூடி அணிந்த தீவிரவாதி நடந்துசெல்கிறார்.

## மைக்கேல் ஜாக்சன் வழக்கு தீர்ப்பு வழங்குவதில் குழப்பம்

பொப்பிசைப்பாடகர் மைக்கேல் ஜாக்சன் 13 வயது சிறுவனுடன் பாலியல் உறவு கொண்டதாக அமெரிக்காவின் சாந்தா மரியா நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது இந்த வழக்கில் சாட்சிகள் விசாரணை, வக்கீல்கள் வாதம் முடிந்துவிட்டது.

நீதிபதிகள்குழு தீர்ப்பு வழங்குவது தொடர்பாக ஆலோசனை நடத்தினார்கள் முதல் நாள் ஆலோசனைக் கூட்டத்திலும், இரண்டாவது நாள் நடந்த ஆலோசனைக் கூட்டத்திலும் நீதிபதிகள்குழு எந்த முடிவுக்கும் வரவில்லை. தீர்ப்பு வழங்குவது தொடர்பாகக் குழப்பம் தொடர்ந்து நீடிக்கிறது.

எந்த நேரத்திலும் தீர்ப்பு வரலாம் என்பதால் நீதிமன்ற வளாகத்தைச் சுற்றியும் மைக்கேல் ஜாக்சன் வீட்டை சுற்றியும், வீடியோ நிபுணர்களும், பத்திரிகையாளர் களும் திரண்டிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.



சுன்னி முஸ்லிம்களின் பிரதான நகரமான ஹவிஜாவின் வடக்கு, மேற்கு, கிழக்கு நுழைவாயிற் சோதனைச் சாவடிகளைக் குறிவைத்து நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதல்களில் காயமடைந்து வைத்தியாலையிலுள்ள சகாவுக்கண்மையில் ஈராக் அதிகாரிகள்.

## பொலிவியாவில் மக்கள் போராட்ட எதிரொலி அந்நாட்டு சனாதிபதி திடீர் இராஜினாமா

தென்னமெரிக்க நாடான பொலிவியாவின் அதிபர் கார்லோஸ் மோஸா தனது பதவியை திங்கட்கிழமை இராஜினாமாச் செய்துள்ளார்.

நாட்டின் இயற்கை எரிவாயுத் துறையை அரசுடமையாக்க வேண்டும் என்று வலியுறுத்தி ஆயிரக்கணக்கானோர் அதிபர் மாளிகைமுன் ஆர்ப்பாட்டம் நடத்தியதுடன், அவரது மாளிகையையும் நாடாளுமன்றத்தையும் முற்றுகையிட்டனர். ஆனால், அக்கோரிக்கையை ஏற்க முடியாதென அறிவித்த அதிபர் கார்லோஸ், தனது பதவியை இராஜினாமாச் செய்வதாக அறிவித்தார்.

ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள், ஆசிரியர்கள், சுரங்கத் தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் அந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். போராட்டம் நடத்தியவர்கள், பொலிஸ் தடையையும் மீறி அதிபர் மாளிகையைக் கைப்பற்றுவோம் என்று அச்சுறுத்தினர்.

அதையடுத்து தனது மாளிகையிலிருந்து தப்பிய அதிபர் கார்லோஸ், வெளிநாட்டுத் தூதரகம் ஒன்றில் தஞ்சமடைந்திருப்பதாக வதந்திகள் பரவின. இதற்கிடையே நாட்டு மக்களுக்கு அவர் திங்கட்கிழமை ஆற்றிய உரையில், தனது இராஜினாமா முடிவை அறிவித்தார். தென்னமெரிக்காவில், வெனிசூலாவுக்கு அடுத்தபடியாக பெருமளவு இயற்கை வாயு வளத்தைக் கொண்ட நாடுபொலிவியா. எனவே பெருமளவில் வருமானம் தரும் எரிவாயுத்துறையை அரசுடமையாக்க வேண்டுமென்று மக்கள் போராடி வருகின்றனர்.

## ஓரின சேர்க்கையாளர் திருமணத்துக்கு போப்பாண்டவர் எதிர்ப்புத் தெரிவிப்பு

(ரோம்)

ஓரினச் சேர்க்கையாளர்கள் திருமணம் செய்து கொள்வதற்கு போப்பாண்டவர் பெனடிக்ட் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்.

ஓரினச் சேர்க்கையாளர் திருமணம் செய்து கொள்வதற்கு சட்டபூர்வமான அங்கீகாரத்தை அமெரிக்காவிலுள்ள சில மாநிலங்களும், ஐரோப்பாவில் சில நாடுகளும் வழங்கியுள்ளன.

ஓரினச் சேர்க்கையாளர்கள் திருமணம் செய்துகொள்வதற்கு மறைந்த போப்பாண்டவர் ஜோன்போல் கடும் எதிர்ப்புத் தெரிவித்துவந்தார். அவருக்குப்பின் வந்த போப்பாண்டவர் பெனடிக்ட்டும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

ஓரினச் சேர்க்கையாளர்கள் திருமணம் செய்துகொள்வது போலியானது. சமூகத்தில் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடியது. குடும்ப உறவின் எதிர்காலத்துக்கே இது ஒரு ஆபத்தாக அமைந்துள்ளது.

விவாகரத்து செயற்கை முறையிலான குடும்பக்கட்டுப்பாடு, கட்டுப்பாடற்று ஆண்-பெண் இணை சேர்த்தல் ஆகிய பழக்க வழக்கங்களும் குடும்பத்துக்கு ஆபத்து விளைவிக்கக் கூடியவையாகும்.எனவும் அவர் கூறினார்.



வெள்ளை மாளிகையில் வைத்து செய்தியாளர் மாநாட்டில் ஒரு செய்தியாளரின் கேள்விக்கு அமெரிக்க அதிபர் புஷ் பதிலளிப் பதையும், (வலது) அருகில் பிரித்தானியப் பிரதமர் ரொனிப்பிளேயர் அவதானித்துக் கொண்டிருப் பதையும் காணலாம்.

## தந்தையைக் காப்பாற்ற முயன்ற மகன் பலி; தந்தையும் பலி

அமெரிக்காவைச் சேர்ந்தவர் காரில்டன் காக்ஸ். 75 வயதான இவர் தக்காளித்தோட்டத்தில் வேலை செய்தபோது மாரடைப்பு ஏற்பட்டது. இதைப்பார்த்த அவர் மகன் மார்ட்டிகாக்ஸ் (வயது-47) வைத்தியருக்கு தொலைபேசியில் உடனே வரும்படி கூறினார்.அத்தோடு வைத்தியருக்கு காத்திராமல் அவர் உயிரைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டார்.

தந்தையின் உயிரைக் காப்பாற்ற முடியாது என்பது மார்டிக்குத் தெரிந்து போனது தன் அண்ணன் டொரிக்கு தொலைபேசியில் தகவல் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. இதில் அவர்பலியானார். தந்தை கரில்டனும் இறந்துபோனார்.

இருவரது உடல்களும் ஒரே இடத்தில் அடக்கம் செய்யப்பட்டன. அப்பா மீது மார்டிக்கு அளவு கடந்த பாசம் உண்டு என்று டெர்ரி கூறினார்.



அமெரிக்காவின் நியோர்க் நகரில் தொலைக்காட்சி நிறுவனம் சார்பில் புது மணப்பெண்களுக்கான நூதனப் போட்டி நடந்தது. 20 மணப்பெண்கள் இதில் கலந்து கொண்டனர். 12 அடி உயரத்துக்கு பிரமாண்ட 'கேக்' செய்து அதனுள் ரூ.25 இலட்சம் பரிசுக்கான அதிஷ்ட எண உள்ள பெட்டி மற்றும் சில பெட்டிகளை மறைத்து வைத்தனர்.அந்த ராட்சத கேக்கை தோண்டி அதிர்ஷ்ட பெட்டியை முதலில் எடுக்கும் மணமகளுக்கு இந்த பரிசுத்தொகை கிடைக்கும். கேக்கை தோண்டிப் பார்த்து ஏமாற்றத்தை தழுவிய பெண்களைப் படத்தில் காணலாம்.

## கிளிங்டன் மனைவி ஹிலாரி மீண்டும் தேர்தலில் போட்டி

(நியோர்க்)

அமெரிக்க செனட் சபைக்கு முன்னாள் சனாதிபதி கிளிங்ட னின் மனைவி ஹிலாரி மீண்டும் போட்டியிடுகிறார். 2008 ஆம் ஆண்டு நடக்கும் சனாதிபதித் தேர்தலிலும் அவர் போட்டியிடத் திட்டமிட்டிருக்கிறார்.

அமெரிக்க சனாதிபதியாக இருந்து ஓய்வு பெற்றவர் கிளிங்டன். இவரது மனைவி ஹிலாரி நியோர்க்கிலிருந்து செனட் சபைக்கு 2000ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரது பதவிக்காலம் அடுத்த ஆண்டு முடிவடைகிறது.

மீண்டும் செனட் சபைக்கு அவர் போட்டியிடுகிறார். இதற்கான செலவுக்காக நிதி திரட்டும் நிகழ்ச்சி நியோர்க்கில் நடந்தது. இந்த நிகழ்வில் ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாய் திரட்டப் பட்டது.

2008ஆம் ஆண்டு நடக்கும் சனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட ஹிலாரி திட்டமிட்டிருக்கிறார்.

இதனால் செனட் தேர்தலில் அவருக்குக் கடும் எதிர்ப்பை ஏற்படுத்த குடியரசுக்கட்சியினர் திட்டமிட்டுள்ளனர். செனட் தேர்தலில மறைந்த சனாதிபதி நிக்சனின் மருமகன் எட்வர்ட் காக்ஸ் நிறுத்தப்படுவார் எனத் தெரிகிறது.

"தங்கள் திட்டத்தை செயற்படுத்துவதற்காக அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துகிறார்கள். நிர்வாகம் என்பதே இல்லாமல் போய் விட்டது என்று புஷ் தரப்பு மீது ஹிலாரி கிளிங்டன் குற்றஞ்சாட்டினார்.இதேவேளை"வோஷிங்டனில் எடுக்கப்படும் தவறான முடிவுக்ளை நினைத்து நினைத்து இரவு எல்லாம் தூக்கத்தைப் பறிகொடுத்தேன் என்று ஹிலாரி கூறியுள்ளார்.

## வேலைக்கு ஊழியர்களை எடுக்கும் விவகாரம் சவுதியில் உயர் மட்டக்குழு!

வெளிநாட்டிலிருந்து வேலைக்கு ஆள் எடுக்கும் விவகாரங்களை கவனிப்பதற்காக உயர் மட்டக் குழு ஒன்றை சவுதிஅரேபியா அமைத்துள்ளது. இந்தக்குழு இன்னும் இரண்டுவாரங்களில் செயற்படத்தொடங்கும் என்று தொழிலாளர் நல அமைச்சர் வைத்தியர் காஜி அல்கோசாய்பி கூறினார்.

மனுக்களை பரிசீலித்து தேவைக்கேற்ப ஒப்புதல் அளிக்கப்படும் என்றும் அவர் கூறினார். தகுதிவாய்ந்த ஊழியர்கள் கிடைக்காததால் தொழிற் திட்டங்களைத் தொடங்க முடியவில்லை என்று வெளிநாட்டு முதலீட்டாளர்கள் புகார் கூறியதால் இந்தக்குழு அமைக்கப்பட்டுள்ளது.



போப்பாண்டவர் ஜோசப் பெனடிக்ட் ரோம் நகரில் செயின்ட் ஜான் தேவாலயத்தில் நடந்த சிறப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டார். அனைத்து விஷப்புகளும் இதில் கலந்து கொண்டனர். அவர்கள் மத்தியில் பேசிய பெனடிக்ட் அவர்களுக்கு ஆசி வழங்கிய காட்சி.

# "சுதந்திரபுரம் படுகொலை" நினைவு நாள்; நாளையதினம் அனுஷ்டிப்பு!

(உடையார்கட்டு)

**சிறிலங்கா இனவாத அரசானது கொரூரமான முறையில் எறிகணைகளாலும், விமானக் குண்டு வீச்சுக்களாலும் சுதந்திரபுரம் பகுதியை கண்மூடித்தனமாகத் தாக்கி அப்பாவிகளைப் பலிகொண்ட சம்பவமான "சுதந்திரபுரம் படுகொலை"களின் ஏழாம் ஆண்டு நினைவு நாள் நாளை அனுஷ்டிக்கப்படவுள்ளது.**

அப்பாவி மக்களை படுகொலை செய்த நினைவு நாள் நிகழ்வும் லெப்.கேணல்.அம்மா அன்பு அவர்களின் நினைவுநாள் நிகழ்வும் சுதந்திரபுரம் சந்தியில் இடம்பெறவுள்ளது.

உடையார்கட்டு பிரதேச அரசியல்துறையினரும், பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினரும் இணைந்து இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த நினைவு நாள் நிகழ்வில் அரசியல் கருத்துரைகள், இசை நிகழ்வு, மற்றும் பல கலை நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. (19)

# தச்சடம்பன் பகுதியில் வாகனம் கவிழ்ந்தது



புதூர் கோயிலிலிருந்து முத்துஐயன்கட்டுநோக்கி வந்த கன்டர் ரக வாகனம்தச்சடம்பன் பகுதியில் விபத்துக்குள்ளானது. நேற்று முன்தினம்இரவு புதூர் நாகதம்பிரான் ஆலயத்திலிருந்து மாங்குளம் ஊடாகவந்த கன்ரர் ரக வாகனத்தின் சக்கரம் காற்று போனதால் இவ்விபத்து ஏற்பட்டதாகத் தெரியவருகிறது. (05)

# ஆங்கில பாடம் கற்றுக் கொடுக்க முல்லை.தமிழ்ச் சங்கம் நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட தமிழ்ச் சங்கம் இப்பிரதேச மாணவர்களுக்கு ஆங்கில பாட வகுப்புக்களை முள்ளியவளையிலும் புதுக்குடியிருப்பிலும் இம் மாத நடுப்பகுதியிலிருந்து நடத்த உத்தேசித்துள்ளது.

சனி,ஞாயிறு தினங்களில் மு.ப. 9.00மணிமுதல் நண்பகல் 12.00 மணி வரை மட்டும் வகுப்புக்கள் நடைபெறும்.

ஆங்கிலப்பாடத்தில் திறமைச் சித்தி பெறாதவர்கள் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதை உணர்ந்தே தமிழ்ச் சங்கம் இவ்வகுப்புக்களை நடத்துவதன் மூலம் உதவலாமெனக் கருதியுள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த (சா/த) பரீட்சைக்கு ஆங்கிலப் பாடத்திற்கு விண்ணப்பித்தவர்கள் மட்டுமே இவ்வகுப்பிற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

மேலேசொல்லப்பட்ட தற்கிணங்க சேர்த்துக் கொள்ளப்படுவர்களுக்கான ஆங்கிலப்பாட வகுப்புக்கள் முள்ளியவளையில் மு/கலைமகள் வித்தியாலயத்தில் இம் மாதம் 18 ஆம்திகதியும் புதுக்குடியிருப்பில் சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையில் இம் மாதம் 19அம் திகதியும் மு.ப.9.00மணிக்கு ஆரம்பிக்கப்படும்.

# செம்மலையில் ஆரம்ப சுகாதார, தொழிற்பயிற்சி நிலையங்களுக்கான அடிக்கற்கள் நாட்டும் நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு செம்மலையில் ஆரம்ப சுகாதார நிலையம், மற்றும் தொழிற் பயிற்சி நிலையம் என இரு நிலையங்களுக்கான பெயர்ப்பலகைகள் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் நேற்று முன் தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் நண்பகல் 12.00 மணியளவில் செம்மலைக் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் மயில்வாகனம் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் மங்கல விளக்கினை ஜேர்மன் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் சண்முகரத்தினம், கிராம சேவையாளர் அமுதராஜினி, முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப்பணிப்பாளர் ராமமூர்த்தி, அளம்பில் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் அரவிந்தன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

ஜேர்மனியிலுள்ள சுவேன்வேர்ட், ஓல்டன்டோவ் ஆகிய நகரங்களைச் சேர்ந்த மக்களின் நிதிப் பங்களிப்புடன் நிறுவப்படவுள்ள சுகாதார நிலையத்தின் பெயர்ப் பலகையினை சுனாமிக்குப்பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவை நிகழ்ச்சித் திட்டப் பிரிவின் பொறியியலாளர் த.அன்ரன் திரைநீக்கம் செய்து வைத்தார். ஜேர்மன் சிப்டொர்ப் நிறுவன நிதிப் பங்களிப்புடன் நிறுவப்படவுள்ள தொழிற்பயிற்சி நிலையத்தின் பெயர்ப்பலகையினை ஜேர்மன் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் கி.சண்முகரத்தினம் திரைநீக்கம் செய்து வைத்தார். இதனையடுத்து அடிக்கற்கள் நாட்டும் நிகழ்வும் வைபவரீதியாக இடம் பெற்றது. சண்முகரத்தினம், இராமமூர்த்தி, முல்லைத்தீவு மாவட்ட சுனாமிப் பேரலை அனர்த்த வேலைத்திட்டப் பணிப்பாளர் றெஜி, திருமதி அமுதராஜினி, அரவிந்தன், இரத்தினம், அன்ரன், மாதர் சங்கத் தலைவி திருமதி சரஸ்வதி, சீட் நிறுவனத்தைச் சார்ந்த நவநீதன், சமூகப் பொருளாதார அபிவிருத்திச் சங்கத்தைச் சார்ந்த இரவிக்குமார், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் மயில்வாகனம் ஆகியோர் அடிக்கற்களை நாட்டினர். இதனைத் தொடர்ந்து இடம் பெற்ற தலைமையுரையயடுத்து மயில்வாகனம், சண்முகரத்தினம், இராமமூர்த்தி, திருமதி.அமுதராஜினி, இரத்தினம், அன்ரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கியிருந்தனர்.

சண்முகரத்தினம் உரையாற்றுகையில், இங்குள்ள மக்களுக்காக ஜேர்மனியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டச் செயற்பாடுகள் பற்றியும் செம்மலை மக்களுக்காக முடிந்தளவிலான உதவிகளைத் தொடர்ந்தும் செய்யவிருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார். (கு)



# ஒட்டுசுட்டான் பகுதியில் தங்கச் சங்கிலி திருட்டு

(புதுக்குடியிருப்பு)

ஒட்டுசுட்டான் பகுதியில் யுவதியிடம் தங்கச் சங்கிலி அறுத்த சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை பி.ப. 1.30 மணியளவில் ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்துக்கும் நீர்ப்பாசனத் திணைக்களத்துககும் இடையில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது சம்பவதினம் ஒட்டுசுட்டான சிவன் கோவிலடிப் பகுதியைச் சேர்ந்த யுவதி ஒருவர் புளியங்குளத்திலிருந்து ஒட்டசுட்டானை நோக்கி துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த போது உந்துருளியில் எதிரே வந்த நபர் யுவதியின் கழுத்திலிருந்த தங்கச் சங்கலியை அறுத்துச் சென்றுள்ளார். (௦ஐ)

# இந்தியாவிலிருந்து திரும்பியோருக்கான முக்கிய கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கும் 2002 ஆம் ஆண்டு சமாதான ஒப்பந்தத்தின் பின்பு இது வரைக்கும் இந்தியாவிலிருந்து மீளத்திரும்பியவர்களுக்கான கலந்துரையாடலும் ஐ.ஓ.எம் நிறுவனத்தின் உதவித்திட்டத்திற்கான பதிவுகளும் கீழ்வரும் இடங்களில் நடைபெறவுள்ளன.

இன்று காலை 8.00 மணிக்கு கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனம், புளியம் பொக்கணைச் சந்தியிலும் நாளை காலை 8.00 மணிக்கு கருணா நிலையம் (கிளிநொச்சி நீதி மன்றம் முன்பாக)

ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

# மன்னாரில் வீதி விபத்து அதிகரிப்பு

(மன்னார்)

மன்னாரில் தினமும் வீதி விபத்து அதிகரித்துக் கொண்டு வருகின்றது.

தற்சமயம் என்றும் இல்லாதவாறு வாகனங்களின் பாவனை அதிகரித்து வந்தமையும் சில வாகன உரிமையாளர்கள் தங்களின் வாகனங்களை பிரதான வீதிகளில் போக்கு வரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நிறுத்தி இருப்பதால் இவ்வாறு வீதி விபத்துக்கள் ஏற்படக் காரணமாக இருக்கின்றன.

இதனை மன்னார் பிரதேச சபையினருக்கு மக்கள் அறிவித்தும்இது வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (18)

# காணி வழங்கல்

(புதுக்குடியிருப்பு)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க முல்லைத்தீவு கிளைக்கு, தமிழீழ நிர்வாக சேவையின் முல்லை மாவட்ட செயலகத்தினரால் அரை ஏக்கர் காணி, முல்லைத் தீவு-மாங்குளம் வீதியில் தொழில் நுட்பக்கல்லூரிக்கு முன்பாக வழங்கப்பட்டுள்ளது. இதனை முல்லை.மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் செ.முரளி இலங்கை செஞ்சிலுவைச்சங்க முல்லைத்தீவுக் கிளையின் தலைமைச் செயலகத்துக்கு என வழங்கியுள்ளார். (08)



கிளிநொச்சி இந்து ஆரம்ப பாடசாலையின் கூரைகள் காற்றினால் சேத மடைந்துள்ளதையும் இதனுள்ளிருந்து மாணவர்கள் கல்வி கற்பதை யும் படத்தில் காணலாம். (படம் - சோதி)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான உளசார் செயலமர்வு

தமிழர் புனர்வாழ்வுக் கழக மட்டக்களப்பு மாவட்ட மூன்பள்ளி மேம்பாட்டு நிறுவனம் "போரூட்" "பீப்பிள் இன் நீட்" ஆகிய நிறுவனங்களின் அனுசரணையில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான உளசார் செயலமர்வு நடைபெற்று வருகின்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்ட முன்பள்ளி இணைப்பாளர் தலைமையில் மட்டக்களப்பு மன்றேசா தியான இல்லத்தில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச்செயலமர்வு இரண்டு தொகுதிகளாக இடம் பெற்று இன்றுடன் முடிவடையும்.

# புதிய கட்டடம்

(மன்னார்)

மன்னார் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கான புதிய கட்டடவேலைகள் நடைபெற்று வருகின்றன.

"நிகொட்" அமைப்பின் நிதி உதவியுடன் ஒரு கோடி 60 இலட் சம் ரூபா செலவில் இக்கட்டடப் பணி நடைபெற்று வருகிறது. (18)

**– உயர் பாதுகாப்பு வலய பிரச்சினை காரணமாக –**

# இடம்பெயர்ந்த பாடசாலைகள் நெருக்கடி நிலையில்;

# அடிப்படை வசதிகளை வழங்க அரசு அசமந்தம்!

(யாழ்ப்பாணம்)

**அதியுயர் பாதுகாப்பு வலயப்பிரச்சினை காரணமாக இடம் பெயர்ந்துள்ள பாடசாலைகளில் பெரும்பாலானவற்றில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி வழங்குவதில் அரசு காட்டிவரும் அசமந்தப் போக்கினால் அவை முற்றாகச் செயலிழந்து போகலாமென அச்சம்தெரிவிக்கப்படுகின்றது.**

வலிகாமம் வடக்கின் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினால் இடம்பெயர்ந்த பாடசாலைகளில் பெரும்பாலானவை கடந்த 15 வருடங்களுக்கு மேலாக தனியார் காணிகளிலேயே இயங்கிவருகின்றன.

தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டே இடம் பெயர்ந்த மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும் நிரந்தரக் காணிகள் இல்லாதிருப்பதைக் காரணம் காட்டி கட்டடங்கள் எதனையும் அமைத்து வழங்க அரசு மறுத்து வருகின்றது.

இதனால் தற்காலிகமாக அமைக்கப்பட்ட கொட்டகைகளிலேயே தொடர்ந்தும் வகுப்புக்களை நடாத்த வேண்டியதோர் நிலை ஏற்பட்டுள்ளது.

உதாரணமாக வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த வசாவிளான் மகாவித்தியாலயம், தற்போது உரும்பிராய் பகுதியிலுள்ள தனியார் காணியொன்றிலேயே இயங்கி வருகின்றது. அடிப்படைவசதிகளேதுமற்ற தற்காலிக கொட்டகைகளில், மண்தரையிலேயே அங்கு வகுப்புக்கள் இடம் பெறுகின்றன. ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கல்வி கற்கும் இப்பாடசாலையில் முறையான மலசலகூடமோ, குடிநீர் வசதிகளோ இல்லை. அத்துடன் பெரும்பாலான வகுப்பறைகளது கூரைகள் சேதமுற்று மழை நீர் உட்புகுந்து வருகின்றது.

இவ்வாறானதோர் நிலையில் ஏனைய பாடசாலைகளில் கணினி வசதிகள், விஞ்ஞான ஆய்வுகூடங்கள் மற்றும் தகவல்கள் தொழில்நுட்ப வசதிகள் மேம்பட்டு வருகின்றன.

இவ்வாறு வசதிவாய்ப்புக்கள் கூடிய பாடசாலைகளை நோக்கியே மாணவர்கள் படையெடுத்து வருவதால், இடம்பெயர்ந்த பாடசாலைகள் பலவற்றையும் முற்றாக மூடிவிட வேண்டியதோர் சூழல் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறானதோர் சூழலை கருத்தில் கொண்டாவது அப்பாடசாலைகளை சொந்த இடங்களில் மீள இயங்க அனுமதிக்க வேண்டுமென கல்விச் சமூகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (27)

## சிறுகதை நூல் வெளியீட்டு விழா

"வெளிச்சம்தேடும் விளக்குகள்" என்றசிறுகதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இடம் பெறவுள்ளது.

நெல்லியடியில் உள்ள முருகன் திருமணமண்டபத்தில் கரவெட்டிப்பிரதேசசெயலாளர் ச.சத்தியசீலன் தலைமையில் இவ்வெளியீட்டு விழா இடம்பெறும். (33)

## யாழ்.பல்கலைக்கழகத்தில் புகழேந்தியின் ஓவியக்கண்காட்சி

(நல்லூர்)

தமிழக ஓவியர் புகழேந்தியின் ஓவியக் கண்காட்சி நேற்று முன்தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழககேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. சர்வதேச மாணவர்அமைப்பு துணைப்பொறுப்பாளர் குகன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பொதுச்சுடரினை தமிழக ஓவியர் புகழேந்தி, கலைப்பீடாதிபதி சிவச்சந்திரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியினை யாழ்.மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி ஏற்றிவைத்தார். ஓவியக்கண்காட்சியினை ஓவியர் இராசையா திறந்துவைத்தார். இவ் ஓவியக் கண்காட்சியை பெருமளவானோர் பார்வையிட்டார்கள். (41)

## நாட்டுப்பற்றாளர் குமாரவேலுவிற்கு யாழ். இல் இன்று அஞ்சலி நிகழ்வு

நாட்டுப்பற்றாளர் அம்பலவாணர் குமாரவேலுவின் அஞ்சலி நிகழ்வு இனறு நண்பகல் நடைபெறவுள்ளது. யாழ்.கிட்டு பூங்காவுக்கு அருகிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை யாழ்.தேசிய எழுச்சிப் பேரவையினர் மேற்கொண்டுள்ளனர்.

## "பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்" கோப்பாயில் இன்று நாடக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் சமூக அபிவிருத்தி மன்றத்தின் கட்டட நிதிக்காக இன்று பிற்பகல் 4.00 மணிக்கு கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலையில"பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்" என்னும் நாடகம் மேடையேற்றப்படவுள்ளது.

இந்நிகழ்வு மன்றத்தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக கோப்பாய் உதவி அரச அதிபர் திருமதி அஞ்சலி சாந்தகுமாரும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை அதிபர் ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.(சு)

## அரியாலை தெற்குப்பகுதியில் கிராம அபிவிருத்தி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். அரியாலை தெற்கு கிராமத்தில் நிகொட் திட்டத்தின்கீழ் கிராம அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நல்லூர்ப்பிரதேச செயலாளர் திருமதி தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார்.

இதற்கென நிகொட் திட்டத்தின் கீழ் 70 இலட்சம் ரூபா செலவிடப்படுருப்பதாகவும் அவர் கூறுகின்றார். இந்நிதியில் இருந்து சுயதொழில் மேம்பாட்டு உதவிகள், வீதிப்புனரமைப்பு,சனசமூக நிலைய புனரமைப்பு, வீடுகள் புனரமைப்பு, பொது ஸ்தாபனங்கள் புனரமைப்பு என்பன மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நல்லூர் பிரதேசசெயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (33)

## பாதுகாப்பு வலயத்தினுள் இந்து ஆலயங்கள் முடக்கம்; விடுவிப்பதில் இந்து கலாச்சார அமைச்சு மௌனம்!

**சமூக அவதானிகள் விசனம்**

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இராணுவ அதி உயர்பாதுகாப்பு வலயங்களுள் முடங்கிக் கிடக்கும் இந்து ஆலயங்களை விடுவிப்பதற்கு இந்து கலாச்சார அமைச்சு எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்க வில்லையென சமூக அவதானிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சிஆகிய பிரதேசங்களில் உள்ள இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயங்களுள் சுமார் 200 இற்கும் மேற்பட்டபெரிய,சிறியமற்றும் நடுத்தர அளவிலான இந்து ஆலயங்கள் முடக்கம் பெற்றுள்ளன.

இதில் ஒரு சில ஆலயங்களில் மட்டும் பலத்த இராணுவக் கெடு பிடிகள் மத்தியில் பூசை வழிபாடுகள் நடந்து வருகின்றன. அதிகளவிலான ஆலயங்கள் மூடப்பட்டும்,பௌத்த வணக்கஸ்தலங்களாக மாற்றப்பட்டும், ஆலயப் பொருட்கள் சூறையாடப்பட்ட நிலையிலும் இராணுவ அதிஉயர்பாதுகாப்பு வலயங்களுள் முடக்கமடைந்து காணப்படுவதாக சமூக ஆர்வலர்களும் இந்து அமைப்புக்களும் சுட்டிக் காட்டியுள்ளன.

இது குறித்து இந்து கலாச்சார அமைச்சோ அல்லது அது சார்ந்த திணைக்களமோ எந்தநடவடிக்கைகளையும் எடுத்து இராணுவபாதுகாப்பு வலயஆக்கிரமிப்பிலிருந்து இவ் இந்து ஆலயங்களைவிடுவிக்க முயற்சிகளை எடுக்கவில்லை எனவிசனம் தெரிவிக்கின்றனர். (33)

## யாழ். குடாநாட்டு உணவகங்களில் சுகாதார தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருக்கும் உணவகங்களின் சுகாதாரத் தரக் கட்டுப்பாட்டைப்பேணும் நடவடிக்கைகளைப் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனை ஆரம்பித்திருக்கின்றது.

அந்த வகையில் யாழ்ப்பாணத்திலுள்ள சகல உணவகங்களுக்கும் நேரில் சென்று அவற்றின் சுகாதார நிலைமைகளைக் கணிப்பீடு செய்வதற்கு பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிமனை நடவடிக்கைகளை எடுத்திருப்பதாக பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு உணவகங்களின் சுகாதாரத் தரக்கட்டுப்பாட்டைப் பேணுவதற்காக சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுசுகாதார பரிசோதகர்கள் அடங்கிய குழுவினர் உணவ கங்களுக்கு நேரில் சென்று நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

யாழ்ப்பாண உணவகங்களில் சுகாதார சீர்கேடுகள் அதிகரித்திருப்பதாகக்கிடைத்த முறைப்பாடுகளை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கபபட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (33)

## மிளகாய் பயிர்களுக்கு "எரிகுருமன்" நோய்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மிளகாய்ப் பயிர்களுக்கு "எரிகுருமன்" நோயின் தாக்கம் அதிகரித்து வருவதாக யாழ். மாவட்ட விவசாய ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளது.

தற்போது யாழ் குடாநாட்டில் நிலவும் கடும் வெப்பமான காலநிலையின் காரணமாகவே இவ் எரிகுருமன் நோயின் தாக்கம் அதிகம் காணப்படுவதாகவும் விவசாய ஆராய்ச்சி நிலையம் மேலும் கூறுகிறது.

எனவே குடாநாட்டில் விவசாயிகள் மிளகாய்ச் செய்கைகளை மேற்கொள்ளும்போது காலநிலையின் தன்மைகளை கவனத்தில் எடுத்து தமது பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதன் மூலம் இத்தகைய காலநிலை மாற்றங்களால் ஏற்படும்நோய்களினால் உருவாகும் வீண் நஷ்டங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம் என்றும் விவசாய ஆராய்ச்சி நிலையம் அறிவுரை கூறியுள்ளது. (33)

**– மின்சார நிலைய வீதி ஊடாக –**

## சடலங்களைக் கொண்டு செல்வோர் மீது படையினர்கெடுபிடி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் உள்ள மின்சார நிலைய வீதி இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்படாததால் யாழ். போதனா வைத்தியசாலையில் இருநது இறந்தோரின் சடலங்களை எடுத்துச் செல்வோர் பலவிதகெடுபிடிகளை எதிர்கொள்கின்றனர்.

யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் இருந்து சடலங்களை எடுத்துச் செல்வதற்கான வெளியேற்றுவாசல் சிறிலங்கா இராணுவத்தின் 51 ஆவது டிவிசன் படையணியினரால் யாழ். நகரில் ஆக்கிரமித்து வைக்கப்பட்டிருக்கும் மின்சார நிலைய வீதியிலேயே உள்ளது.

எனவே இப்பிரேத அறை வெளியேற்று வாசலூடாக சடலங்களை எடுத்துச் செல்வோர் மேற்படி மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள இராணுவ பாதுகாப்பு வலயத்தினூடாகவே செல்ல வேண்டியநிலை உள்ளது.

இதனைக்காரணமாகக்காட்டி யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து சடலங்களை வெளியே எடுத்துச்செல்ல வேண்டுமாயின் படையினரின் அனுமதியை முற்கூட்டியே பெறவேண்டும் எனவும், சடலம் படையினரது கண்காணிப்பிலேயே பாதுகாப்பு வலயத்தைத் தாண்டும் வரை எடுத்துச்செல்லப்பட வேண்டும் என்றும் படையினர் நிபந்தனை விதித்துள்ளனர். இதனால் இறந்தவர்களின் சடலங்களை எடுத்துச்செல்வோர் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர். (33)

### பெற்றுக்கொள்ளவும்

(அலுவலகசெய்தியாளர்)

குருபரன் வீதி முழங்காவில் எனும் முகவரியைச் சேர்ந்த தியாகன் தயாரூபன் என்பவரது தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் வைமன் வீதி நல்லூரிலுள்ள ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் பெற்றுக்கொள்ளவும். (சு)

### விண்ணப்ப திகதி நீடிப்பு

சைவ பரிபாலன சபையினரால் வருடந்தோறும் நடத்தப்படும் சைவ நெறித் தேர்வு விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 15 ஆம் திகதிவரை பிற்போடப் பட்டுள்ளதாக யாழ்ப்பாண சைவபரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

இலங்கைக்கு நிதி வழங்கும் உலக நாடுகளின் பொதுக்கூட்டம் கடந்த மாதம் கண்டியில் வெற்றிகரமாக முடிவடைந்தது. இலங்கை அரசாங்கம் எதிர்பார்த்ததை விட மேலதிக நிதி கிடைக்க வாக்குறுதியளிக்கப் பட்டது. 30,000 கோடி ரூபாய் நிதி இதில் அடங்கும் தற்பொழுது இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நகர்வுகள் பொருளாதார அபிவிருத்திகள் யாவும் ஒளிவுமறை வின்றி இம் மாநாட்டில் உதவிகள் வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளுக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. பத்திரிகைகளுக்கும் எவ்வித தணிக்கையும் செய்யப்படவில்லை உண்மையானவைகள் அங்கு எடுத்துக் கூறப்பட்டன.

மிக இலகுவாக இக்காரியங்களை நிறைவேற்ற முடியாது. அரசின் திட்டங்கள் வகுக்கப்படாமல் வெளிநாடுகளின் உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியாது. இத்திட்டங்களில் நாட்டின் கல்வி, சுகாதாரம் என்பவற்றுக்குமுக்கியத்துவம் கொடுத்தபடியால் இந்த மகாநாட்டில் இது முக்கியத்துவம் பெற்றது. விசேடமாக சுனாமி பேரழிவுகளினால் ஏற்பட்ட பிரச்சினைகள் இந்த பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்துவதற்கு இருக்கும் முட்டுக்கட்டைகள், அபிவிருத்தியை எப்படி மேற்கொள்வது என்பதை அரசு தயாரித்து மாநாட்டில் சமர்ப்பித்தது. கண்டி மாநாட்டில் வாக்குறுதியளிக்கப்பட்ட 30,000 கோடி இந்தக் கடன் இரத்துச் செய்தமையால் முன்னெடுத்துச் செல்ல முடியும் என்பதை நாங்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கண்டி மகாநாட்டில் எமக்கு கிடைத்த 30,000 கோடி ரூபா நிதியில் 20,000 கோடி ரூபா நிதி மீண்டும் அறவிடப்போவதில்லை என கண்டியில் நிதி வழங்கும் நாடுகள் கூறி உள்ளன. இது கண்டி மகாநாட்டின் மாபெரும் வெற்றியாகும். சாதாரணமாக உலகில் நிதி வழங்கும் நாடுகள் கொள்கை அளவில் அமெரிக்காவின் டொலர் 1000த்திற்கும் தனிநபரின் வருடாந்த வருமானத்தை கணிப்பீடு செய்யும் ஒரு வெளிநாட்டில் இருந்து உதவிகள் பெறுவது மிகக் கடினமான தொன்றாகும். ஆனால் இவற்றை எல்லாம் வெல்வதற்கு சுனாமி பேரலைகள் எமக்கு உதவியபடியால் வெளிநாட்டின் நிதி உதவிகள் எமக்கு வெகு விரைவில் கிடைத்தன.

இம் முறை எந்த வித நிபந்தனைகளும் விதிக்காமல் எமக்கு உதவி நிதி கிடைத்தது மாபெரும் வெற்றி என நாம் கருத வேண்டும். நாட்டின் அரச நிர்வாகத்தின் கீழ் பேரழிவுகள் ஏற்பட்டால் இந்த உதவிகள் எமக்கு கிடைத்திருக்காது. இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட பேரழிவுகளுக்கு எதுவும் செய்ய முடியாதென்பதை உணர்ந்த வெளிநாடுகள் எமக்கு இப்பொழுது உதவிக்கரத்தை நீட்டியுள்ளன. கொடுக்கப் போகும் நிதி முறையாக தீங்கும் ஏற்படாது. சில அரசியல்வாதிகள் தங்களின் இலாபம் கருதி படுமோசமான பிரச்சாரங்களை மேற்கொண்டுள்ளனர். தற்பொழுது சுனாமி நிவாரணம் பங்கீடு செய்யும் பொழுது இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் விடுதலைப்புலிகள் இந்த நிவாரண பங்கீடுகளை செய்து வருகின்றனர். திருகோணமலை, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் புலிகள் நிவாரண சபைகளை அமைத்து அப்பணியினை மிகத் திறம்பட நடத்துகின்றனர்.

மத்திய திறைசேரிக்கு வரும் சுனாமி நிவாரண நிதி பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு பகிர்ந்தளித்த பின் இது சம்பந்தமாக பரிசீலனை செய்வதற்கு அரசுக்கு உரிமை உண்டு. பாடசாலைகள், வைத்தியசாலைகள் ஏனைய கட்டடங்கள் எங்கே கட்டப்பட்டுள்ளன. இவ்வேலைத் திட்டங்களுக்கு நிதி முறையாக செலுத்தப்பட்டு வேலைகள் யாவும் திறமையாக நடைபெற்றுள்ளதா? என்பதை அவதானிப்பதும் சுனாமி கூட்டு வேலைத்திட்டத்தின் செயற்பாடுகளில் அமைந்துள்ளதென்பதை அவ் வேலைத் திட்டத்தின் மூலமாகத்தான் அறிந்து கொள்ளமுடியும். ஆகவே இச்சபைக்கும் அரசுக்கும் தொடர்புகள் கிடையாது. ஆகவே தற்பொழுது அரசாங்கம் சுனாமி கூட்டு சபை அமைத்தால் அதில் விடுதலைப்புலிகள் அங்கீகரிக்கப்பட்டு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து செல்வார்கள். இதனால் அரசாங்கத்திற்கு எந்த இடைஞ்சல்களும் ஏற்படாது.

யான நிதி சுனாமி கட்டமைப்பிற்கு வந்து சேரும். இந்நிதியை பங்கீடு செய்வதில் இந்த வங்கிகளுக்கு அதிக சிரமமும் ஏற்படாது தற்சமயம் இந்த சுனாமி கூட்டு ஒப்பந்தத்தை மேற்கொள்ளாவிடில் அல்லது மேற்கொள்வதில் சிரமங்கள் ஏற்பட்டால் மேலும் ஒரு அடி முன்னோக்கிச் செல்வதை விட தற்பொழுது உள்ள நிலையிலும் பார்க்க பல அடிகள் அரசு பின்னுக்கு தள்ளப்படும். இது தவிர்க்க முடியாத நிலைமையாகும். இந்த ஒப்பந்தத்தினால் அரசாங்கம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்கு செல்லக் கூடியதொரு வாய்ப்பு ஏற்படும் இந்த நிவாரணப்பணிகளை அரசு முன்னின்று செய்யத் தவறினால் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்களின் ஆதரவினை பெற்றுக் கொள்ள முடியாது. ஆகவே இக்கூட்டு ஒப்பந்தம் அரசுக்கு மிக முக்கியமானதொன்றாகும்.

இந்தக் கூட்டு ஒப்பந்தம் செய்து நாட்டில் உள்ள மக்களின் விசுவாசத்தை அரசு பெற்றுக் கொள்ள வேண்டும். அதாவது வேறுபட்ட கருத்துக்கள் கொண்டவர்கள் இந்தக் கூட்டு அரசாங்கத்தில் இருக்கின்றபடியால் அவர்களை எப்படியாவது இணங்க வைக்க வேண்டும் நாங்கள் பல சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தின் குறைபாடுகளை எப்படி நிவர்த்தி செய்ய வேண்டும் என்பதை தெளிவாக விளக்கி இருக்கின்றோம் நூற்றுக்கு ஐந்து சதவிகித பொருளாதார முன்னேற்றத்தை நாடு கண்டுள்ளதெனக் கூறுவதில் எந்த பலன்களும் ஏற்படாது.

# பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படாவிடின் — அரசாங்கத்தின் பின்னடைவைத் தவிர்க்க முடியாது

ரூபா நிதி சுனாமி பேரழிவினால் ஏற்பட்ட அழிவுகளை மீண்டும் கட்டி எழுப்பு வதற்கே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மற்றும் நாட்டின் வறுமை நிலை ஏனைய விடயங்கள் இந்த மகாநாட்டில் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. எதிர்வரும் மூன்று வருடத்தில் இவை யாவும் சுனாமி பேரனர்த்தங்களுக்கு மட்டுமே செலவிடப்பட வேண்டும் என்பது இந்த மகாநாட்டில் அறிவிக்கப்பட்ட அறிவித்தலில் அடங்கியுள்ள விசேட அம்சமாகும். எனவே, இதில் சமாதானத்தையும் சுனாமி பேழிவுகளையும் ஒன்றுக் கொன்று பிணைத்துக் கொள்வது அவசியமற்றதொன்றாகும்.

கண்டி நிதி வழங்கும் மகாநாட்டில் சுனாமி பேரழிவுகளினால் ஏற்பட்ட வடக்கு கிழக்கு, ஏனைய தென்பகுதிகள் உள்ளிட்ட பிரதேசங்களை மட்டும் அபிவிருத்தி செய்வதால் மற்றப் பிரதேசங்களின் நிலைப்பாடுகள் என்ன? அபிவிருத்திகளின் நிலை என்ன? என்பதைப் பற்றி வினாக்கள் நாட்டில் ஏற்படாமல் இருக்காது. எமது மனசாட்சியின்படி சுனாமியால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மற்றும் தென்பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கு நாங்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குவது மிக அவசியமாகும் எமது நாடு பட்ட கடன்களையும் சுனாமி பேரனர்த்தம் காரணமாக கடன் கொடுத்த நாடுகள் இரத்துச் செய்யப்போவதாக கூறியுள்ளதை நாங்கள் மறக்கலாகாது. ஆனபடியால் ஏனைய பிரதேச அபிவிருத்திகளையும் செலவிடப்படல் வேண்டும், இதில் பாகுபாடுகள் காட்ட முடியாதென்பது வெளிநாடுகளின் நிபந்தனைகளாகும் . சுனாமி பேரழிவுகளுக்கு அரசும் விடுதலைப்புலிகளும் செய்து கொள்ளும் மீள் கட்டமைப்பு ஒப்பந்தம் எவ்வாறு செயற்படும் என்பதை பொது மக்கள் தற்பொழுது கவனிக்கத் தொடங்கியுள்ளபடியால் அரசு இதில் குழறுபடி செய்ய முடியாது.

சுனாமி பேரலைகளுக்கு அகப்பட்ட வடக்கு கிழக்கில் அரசாங்க கட்டுப்பாடற்ற பல பிரசேதங்கள் உள்ளன. இப் பிரதேசங்களுக்கு அரசாங்க நிவாரணங்கள் முறையாக சென்றடையுமா என்று நிச்சயமாகக் கூறமுடியாது. ஆனபடியால் சுனாமி பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தில் இராணுவக்கட்டுப்பாடற்ற வடக்கு கிழக்கு புனர்நிர்மாண வேலைகளும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. இதனால் மேலும் இக்கூட்டு ஒப்பந்தம் இதில் வலுவடையும்.

சுனாமி கூட்டு ஒப்பந்தம் வடக்கு கிழக்கிற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டது அல்ல. ஒரு வருடத்திற்குள் வடக்கு கிழக்கு புனர்நிர்மாண வேலைகள் இக் கூட்டு சபையால் கட்டி முடிக்கப்படும். இது அரசின் முக்கிய குறிக்கோள் ஆகும். இப்பொதுக்கட்டமைப்பினால், சுனாமியால் பாதிக்கப்பட்ட ஏனைய பிரதேசங்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாத வண்ணம் இக்கட்டமைப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்படும் வடக்கு கிழக்கு புனரமைப்பால் தெற்கில் வாழும் ஏனைய சமூகத்தவர்களுக்கு எந்தத் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதிய நிவாரணம் அரசாங்கம் வழங்காதபடியால் அங்குள்ள மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்கி உள்ளார்கள். அரசாங்கத்தின் நிவாரணம் இல்லாமல் இம் மக்கள் மிகவும் சிரமப்பட்டு வாழ்க்கையை நடத்துகிறார்கள் என்று விடுதலைப் புலிகள் அரசாங்கத்திற்கு பல தடவைகள் எடுத்துக்காட்டி உள்ளனர். புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேச மக்களுக்கு நிவாரணம் வழங்குவது புலிகளுக்கு பெரும் கஷ்டமான செயலாகும். இதனை நாங்கள் மனிதாபிமான அடிப்படையில் ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே, சுனாமி கூட்டு நிவாரணப் பணிவேலைகள் ஆரம்பிக்கும் பொழுது புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களையும் அரசு அபிவிருத்தி செய்யவேண்டும். அப்படிச் செய்தால் மக்கள் அரசாங்கத்தில் அதிக நம்பிக்கையை வைப்பார்கள்.

சுனாமி சபையினால் மதிப்பீடு செய்யும் நிதி திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டு அங்கே அது அங்கீகரிக்கப்படும். மேலும் இது இராணுவ கட்டுப்பாடற்ற பிரதேச புனர்நிர் மாண வேலைகள் பூர்த்தி செய்யப்படும் வடக்கு கிழக்கு சுனாமி பேரலைகளுக்கு உட்பட்ட இரண்டு மைல் கடல் எல்லைகளை அங்கீகரிப்பதற்கு நிவாரண சபை ஒன்றினை அமைத்தால் மேலும் நிதிகள் எமக்கு அதிகமாக வந்து சேரும் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜப்பானிய வங்கிகளின் நன்மதிப்பை பெற்று மேலும் அவர்களிடம் இருந்து அதிகப்படி நாட்டில் எவ்வளவு பொருளாதார முன்னேற்றங்கள் ஏற்பட்டாலும் நாட்டில் ஸ்தீரமான அரசியல் அடித்தளம் இல்லாவிட்டால் அந்த பொருளாதாரத்தில் எந்தப் பலன்களும் கிடையாது ஒரு காலத்தில் மகாவலி அபிவிருத்தியைப் பற்றியும் மற்றும் கப்பல் துறைமுகத்தைப்பற்றியும் அரசாங்கங்கள் பெரும் தம்பட்டம் அடித்துக் கொண்டன. ஆனால் நாட்டில் உள்ள சிறிய பாலங்கள், தரைவழிப்பாதைகளை யாவது, கிராமங்களில் உள்ள சிறிய ஒழுங்கை

லங்காதீப சிங்கள நாளிதழ்
மத்திய திறைசேரி செயலாளர்
நாயகம் பேராசிரியர்
பி.பி ஜயசுந்தர
மொழியாக்கம் அ.சக்திவேல்

களையாவது அபிவிருத்தி செய்வதற்கு எந்த அரசாங்கங்களும் முன்வரவில்லை. இந்த நாட்டில் இனமத பேதமின்றி சகலரும் சமத்துவமாக வாழ வேண்டும். நாட்டில் உள்ள ஒவ்வொரு குடிமகனையும் முன்னேற்ற வைக்கும் பொறுப்பு அரசாங்கத்தைச்சாரும் மக்கள் முன்னேற்றம் அடைந்தால் பொருளாதார முன்னேற்றங்கண்டு நாடு வளமடையும். ஏழ்மை தன்மைகள் நீங்கும் இனப்பிரச்சினை இந்த நாட்டிற்கு ஒரு சாபக்கேடாகும் இதை தீர்த்து வைக்க வேண்டும் முற்றாக என்றைக்கு இவைகளுக்கு தீர்வு காண்கிறார்களோ அன்றுதான் இந்த நாடு உருப்படும். ✤



# மக்கள் மனங்களில் மாறாத வடுவாக சுதந்திரபுரம் படுகொலை

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு சிறார்கள் ஒரே நேரத்தில் உடல்சிதறிப் பலியாகிப்போன வரலாற்றுப் படுகொலைச் சோகத்தினையும் இதே சம்பவத்தில் 25 இற்கும் மேற்பட்டவர்களை பலிகொடுத்த துயரத்தையும் இன்றும் சுமந்தபடி காணப்படும் கிராமம்தான் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சுதந்திரபுர கிராமம்.

உலக வரலாற்றில் படுகொலைகளைச் செய்வதில் கைதேர்ந்தவர்களென புகழ் பெற்ற சிங்களப்பேரினவாதிகள் காலகாலமாக தமிழ் மக்களைப் படுகொலை செய்வதில் தீவிரம் காட்டியே வருகின்றனர். இந்தவரிசையில் இன்று வரை பல ஆயிரக் கணக்கான படுகொலைகளைச் செய்து பல ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலியெடுத்துவரும் சிங்கள ஆட்சியாளர்கள் எங்கெல்லாம் தமிழர்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் சென்று தமது கொலைத்திறனைக் காட்டி வருகிறார்கள். தொட்டில் குழந்தை தொடக்கம் வயதான முதியோர்வரை இவர்களின் படுகொலை வெறியாட்டத்தில் சிக்கி சிதறுண்டு போயுள்ளனர்.

இந்தப் படுகொலைகளின் வரிசையில் தான் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடத்தப்பட்ட பல படுகொலைகளில் சோக வரலாறு மிக்கதொன்றாக சுதந்திரபுரம் படுகொலையும் அமைந்தது.

10.06.1998 அன்று திட்டமிட்ட ரீதியில் தமிழர் குடியிருப்புக்களையும், மக்களையும் இலக்குவைத்து காலை 9.30 மணியளவில் சிறிலங்கா வான்படைக்குச் சொந்தமான அதிவேகத் தாக்குதல் விமானமாகிய கிபிர் என அழைக்கப்படும்


மருதமுத்து-புஸ்பநாதன்

இரண்டு விமானங்களும் தமிழர்தாயகப்பகுதிக்குள் நுழைந்து தமது கொலை வெறியாட்டத்தை நேரம்பார்த்து ஆரம்பித்து வைத்தன. இவ்விமானத்தாக்குதலில் ஒரு தொகை மக்கள் கொல்லப்பட சமகாலத்தில் ஆனையிறவு, அம்பகாமம் ஆகிய இராணுவமுகாம்களிலிருந்த ஆட்லெறிகளும் இலக்குத்தவறாமல் குடியிருப்புக்களை நோக்கி ஷெல்களை ஏவத் தொடங்கின.

அது மட்டுமன்றி மக்கள் ஓடித்தப்புவதற்கோ, நிலையெடுப்பதற்கோ முடியாத அளவிற்குப் போக்குவரத்துப் பாதைகளையும் இலக்கு வைத்து திட்டமிட்டு நடாத்தப்பட்ட இவ் இனப்படுகொலை வெறியாட்ட மானது ஏறத்தாள ஒரு மணித்தியாலம் நீடித்ததோடு அச்சிறிய பகுதியை இலக்குவைத்து பல நூற்றுக்கணக்கான எறிகணைகள் ஏவப்பட்டன.

இக்கோரப்படுகொலைச் சம்பவத்தில் 25 இற்கு மேற்பட்ட மக்கள் உயிரிழந்தனர். இதில் ஒரே குடும்பத்தைச்சேர்ந்த நான்கு சிறார்கள் ஒரே இடத்தில் உடல்சிதறிப் பலியாகினர். இச்சிறார்களைப் பறி கொடுத்த நிலையில் இன்றும் அத்துயரத்தைத் தன்னுள் சுமந்து கொண்டிருக்கும் இவர்களின் தந்தையாரான மருதமுத்து புஸ்பநாதன் என்பவர் தன்னுள் புதைந்து கிடந்த துயரத்தை இவ்வாறு வெளிப்படுத்தினார்.

நாங்கள் கூலித்தொழில் செய்பவர்கள் அன்று எனது மனைவியும்,நானும் தொழிலுக்காக அயல்கிராமத்திற்குச் சென்றிருந்தோம். எமது பிள்ளைகள் ஐந்துபேரும் வீட்டிலே இருந்தார்கள். அன்று காலை 9.30 மணியளவில் விமானங்கள் எமது கிராமங்களுக்கு மேலாகப் பறந்துகொண்டிருந்தன. உடனே எங்களுக்கு வீட்டில் தனியாக இருந்த பிள்ளைகளின் நினைவு வந்தது. நாங்கள் வேலையை இடையில் நிறுத்திவிட்டு வீட்டை நோக்கி ஓடிவரத் தொடங்கினோம். அப்போது அந்த கிபிர் விமானங்கள் குண்டுகளை வீசத்தொடங்கின.

அடுக்கடுக்காக குண்டுகள் விழுந்து வெடித்துக்கொண்டிருக்க மக்கள் செய்வதறியாது சிதறி ஓடிக்கொண்டிருந்தார்கள். விமானக் குண்டுவீச்சுக்கள் முடிந்த சில நிமிடத்திற்குள் இரண்டு மூன்று திசைகளிலிருந்து ஷெல்கள் வந்து மக்களின் குடியிருப்புக்களில் வீழ்ந்து வெடிக்கத்தொடங்கின. நான் வீதியில் மிகவேகமாக ஓடிக்கொண்டிருந்தேன். எனக்கு முன்பாகவும் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

இதனால் நான் வீதியின் அருகே விழுந்து படுத்திருக்கும்போது எனக்கு அருகில் விழுந்து படுக்கவென விழுந்த ஒரு மனிதர் மீண்டும் எழவேயில்லை. அவருக்குச் ெல்பட்டு இறந்துபோனார். இவ்வாறு தொடர்ந்து கொண்டிருந்தேன். ஷெல் வீச்சுக்களின் மத்தியிலும் எனது பிள்ளைகளைக் காப்பாற்றுவதற்காக வீட்டிற்கு ஓடிக்கொண்டிருந்த நான் ஒருவாறாக வீட்டை நெருங்கிக்கொண்டிருக்கும் போது ஷெல்வீச்சு நின்று விட்டது. அந்தப் பகுதியெல்லாம் ஒரே அழுகைக்குரல்கள் கேட்டுக்கொண்டிருந்தன.

நான் எனது வீட்டிற்கு வந்து பார்த்த போது ஒரு பிள்ளையையும் காணவில்லை. பிள்ளைகளைத் தேடிக்கொண்டு சுற்றிப் பார்த்தபோது மாமரம் ஷெல்பட்டு சிதைந்து கிடந்தது.

அந்த இடத்திற்கு ஓடிப்போய்ப்பார்த்


தாக்குதலின்போது பாதுகாப்புத் தேடியுள்ள மக்கள்

தேன். அங்கு எனது பிள்ளைகள் எல்லோருமே சிதைந்து உடல்கள் சிதறிக்கிடந்தார்கள். ஒரு மகன் மட்டும் ஷெல்பட்டு எழும்பி விழுந்துகொண்டிருந்தான். ஒரு பிள்ளையின் இடுப்பிற்குக் கீழ்ப்பகுதியைக் காணவில்லை. மற்ற பிள்ளையின் இடுப்பிற்கு மேல்பகுதி இல்லை. ஒரு பிள்ளையைக் காணவேயில்லை, எல்லாப்பிள்ளைகளும் இறந்துபோய்விட்டார்களே. காணாமல் போன அந்தப்பிள்ளையாவது எங்காவது உயிருடன் இருக்கும் என்று அந்தப்பகுதியெல்லாம் பெயரைச்சொல்லிக் கூப்பிட்டுப்பார்த்தேன் காணவில்லை. பிறகு கிணற்றடிப்பக்கமாகப் பார்ப்பமென்று போய்க்கொண்டிருந்தபோது இடையில் பிள்ளையின் தலைப்பகுதி தான் கிடந்தது. இப்படியாக மூன்று பிள்ளைகளும் சிதறிக் கிடக்க காயப்பட்ட இரண்டு பேரை அயலவர்கள் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு எடுத்துக்கொண்டு போனார்கள். இடையில் ஒரு பிள்ளை இறந்துவிட்டது. அப்போது மீண்டும் ஷெல்வீச்சு ஆரம்பமாகியது. இதனால் என்னோடு நின்று எனது பிள்ளைகளின் உடல்பாகங்களைத் தேடிக்கொண்டிருந்தவர்கள் எல்லோரும் ஓடிவிட்டார்கள். நான் மட்டும் நின்று அவ்வுடல்களைத் தேடி எடுத்து முற்றத்தில் போட்டுவிட்டு என்னசெய்வதென்று தெரியாமல் தவித்துக்கொண்டிருந்தன். பிறகு ஒருவாறாக ஷெல்வீச்சு நிற்க அயலவர்கள், உறவினர்கள் வந்து உடல்களை அடக்கம் செய்ய உதவினார்கள் என தனது மனச்சுமையைப் பகிர்ந்து


கிராமசேவையாளர் சுந்தரலிங்கம்

கொண்டார்.

இப்படுகொலையானது எவ்வாறு நடாத்தப்பட்டது என்பதை சம்பவத்தின்போது மீட்புப்பணியில் ஈடுபட்டவரும் தற்போதைய சுதந்திரபுரக்கிராம கிராம உத்தியோகத்தருமான சுந்தரலிங்கம் அவர்கள் இவ்வாறு கூறுகிறார். சுதந்திரபுர படுகொலை நடைபெற்ற நாளான 10.06. 1998 அன்று மக்கள் குடியிருப்புக்களை இலக்குவைத்து திட்டமிட்ட ரீதியில் இத்தாக்குதல் நடாத்தப்பட்டது இந்தத்தாக்குதலானது விமானத்தாக்குதலுடன் சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணை வீச்சுக்களுடனும் இணைந்த தாக்குதலாகும். இது ஏறத் தாழ ஒன்றரை மணி நேரமாகத் தொடர் ந்து நடத்தப்பட்டது. இக்கிராமத்தையும், இங்கிருந்த தையல்தொழிற்பயிற்சி நிலையத்தினையும் முற்றாக அழிக்கும் நோக்கில் சிறிலங்கா அரசினாலும், இராணுவத்தினராலும் திட்டமிடப்பட்ட ஒரு மிலேச்சத்தனமான தாக்குதலாகவே இது அமைந்திருந்தது. விமானத்தாக்குதலைத் தொடர்ந்து அம்பகாமம் இராணுவமுகாம் பகுதியிலிருந்தும் ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்தும் மேற்கொள்ளப்பட்ட ஷெல்வீச்சுக்கள் காரணமாக மக்கள் எந்தவிதத்திலும் பாதுகாப்பைத் தேடவோ நிலையெடுக்கவோ முடியாத அளவுக்குப் பாதையின் இரு மருங்குகளிலும் வீழ்ந்து வெடித்ததால் போக்குவரத்தைத் தடுத்துநிறுத்தி முற்றாக மக்களைக் கொண்றொழிக்கும் நோக்கிலேயே நடாத்தப்பட்டிருந்தது.

இதேவேளை இத்தாக்குதலில் காயமடைந்தவர்களுக்கு இத்தாக்குதல் முடிவடையும் வரைக்கும் எந்தவிதமான வைத்திய வசதிகளையோ, முதலுதவிகளையோ செய்யமுடியாமலிருந்தது. வீதிகளை இலக் குவைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டதனால் காயப்பட்டவர்கள் நீண்ட நேரமாக முதலுதவிகளின்றியிருந்ததனாலேயே இறந்தோரின் தொகையும் அதிகரித்து.

இத்தாக்குதலின் மூலம் விடுதலைப்புலிகளைத் தாக்குகிறோம் என்ற போர்வையில் ஒரு இனப்படுகொலையை வெற்றிகரமாக இராணுவத்தினர் செய்துமுடித்திருக்கிறார்கள் என்றார்.

இதேவேளை இப்படுகொலையில் தனது கணவனை இழந்தவரான குமாரவேல் உதயகுமாரியின் ஆதங்கம் இவ்வாறு அமைந்திருந்தது.

வழமைபோலவே அன்றைக்கும் அவர் தையல் வேலைக்குப் போயிருந்தார். காலை9.30 மணியிருக்கும் கிபிர் விமானங்கள் வந்து குண்டுகளை வீசின. எனது கணவர் வேலைசெய்யும் அந்தத் தையல் நிலையத்தில் தான் குண்டுகள் வீழ்ந்து வெடித்தன. விமானங்கள் சென்றவுடன் குண்டுவீச்சால்தீப்பிடித்து எரிந்துகொண்டிருந்த தொழில் நிலையத்தை அணைப்பதற்காக வந்த வேளை மீண்டும் இராணுவ முகாம்களிலிருந்து ஷெல்கள் வந்து விழத்தொடங்கின. முதல் ஷெல்லிலேயே இவர் காயப்பட்டு விட்டார்.

இவர் வேலைசெய்யும் அதேஇடத்


குமாரவேல்-உதயகுமாரி

தில் எனது மகளும் வெலைசெய்து கொண்டிருந்தாள். அப்பா காயப்பட்டவுடன் மகள் காயத்திற்குக் கட்டுப்போட்டுக் கொண்டிருக்கும்போது அடுத்தஷெல் வந்து விழ மகளும் காயப்பட்டுவிட்டாள்.

நீண்ட நேரமாக ஷெல்வீச்சு நடைபெற்றதால் உடனடியாக வைத்திய வசதிகள் செய்யமுடியாததால் இரத்தம் வெளியேறியே எனது கணவர் உயிரிழந்தார் என்று கூறினார்.

இற்றைக்கு 7 வருடங்களை எட்டிய நிலையிலும் அப்பகுதி மக்கள் இச்சம்பவத்தை எண்ணி பீதியடையும் நிலைக்கு இப்ப கொலையின் கொடூரம் அமைந்திருக்கின்றது.

**இ.சசிக்குமார்**

ஆக எதிர்காலத்தில் சிங்கள ஆட்சியாளர்களாலோ பேரினவாதிகளாலோ இப்படு கொலைச்சம்பவங்கள் நிறுத்தப்படும் நிலை உருவாகினாலும் அவர்களின் கோரமுகங்கள் எப்போதும் இம்மக்களின் மனங்களில் இருந்து அழியப்போவதில்லை என்பதை இப்பகுதி மக்களின் உள்ளக் கருத்துக்களிலிருந்து உணரமுடிகிறது.

## சனாதிபதிக்கு பிக்குகள் எச்சரிக்கை

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உருவாக்கினால் சிறிலங்கா அரசியலில் அவரது எதிர்காலம் இல்லாதபடி செய்து விடுவோம் என்று பௌத்த பிக்குகள் முன்னணியினர் எச்சரித்துள்ளனர். தேசியப் பிக்குகள் முன்னணியின் செயலாளர் கலவெல்கல சந்திரலோக தேரர் கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் நேற்று முன்தினம் இவ்வாறு கூறினார். ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக கட்டமைப்பை தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்து உருவாக்குவதற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை முதலில் நடத்தவுள்ளோம். சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது முடிவை மாற்றிக்கொள்ளாவிட்டால் வாரஇறுதியிலிருந்து சாகும் வரையிலான உண்ணாவிரதப்போராட்டங்களை நடத்துவோம் என்றார்.


## சமூக வலுவூட்டாளர் பணிநிலைகளுக்கான



## ஆளணி வேண்டுகை

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் சமூக வலுவூட்டாளர் பணி நிலைகளுக்கான ஆளணிகள் வடகிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களிலிருந்தும் தேவைப்படுகின்றனர்.

க.பொ.த உயர்தரம் வரை கல்வி கற்று தொழில் வாய்ப்புக்களின்றி உள்ளவர்களும், க.பொ.த சாதாரண தரத்தில் தேர்ச்சி பெற்று சமூகமட்டத்தில் சேவையாற்றியதற்கான அனுபவம் வாய்ந்தவர்களும் தகுந்த ஆவணங்களுடன் எதிர்வரும் 13.06.2005 அன்று முற்பகல் 11.00 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப்பணியகத்திற்கு சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஊடகத்துறை,
நடுவப்பணியகம், (சி.12041)



## பணிநிலை வேண்டுகை

பணி நிலை - எழுதுநர்

அகவை - 20 தொடக்கம் 30 வரை

பால் - ஆண் பாலர் மட்டும்

தகைமை - க.பொ.த உயர்தரம் 03 பாடங்களில் சித்திய டைந்திருத்தல் வேண்டும். ஆங்கிலம் வாசிக்கத் தெரிந்திருத்தல் வேண்டும். பேசத் தெரிந்திருத்தல் வரவேற்கத்தக்கது.

மேற்படி பணி நிலைக்கு ஆர்வமும்,திறமையும் , தகுதியும்,உடையோர் 11.06.2005 அன்று காலை 10 மணி தொடக்கம் 2 மணிக்கு முன்னதாக தகுந்த ஆவணங்களுடன் நேரில் சமுகம் தரவும்.

குறிப்பு- ஊதியம்நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தகவல்:-
நந்தவனம்,
தபாற்கந்தோர்முன்பாக, யாழ்சாலை,
கிளிநொச்சி.

(6241)


## 1ஆம் ஆண்டு நினைவு

பிறப்பு 1950 01 31



இறப்பு 22 05 2004

## இராசையா கோவிந்தபிள்ளை

ஆண்டொன்று போனாலும்
காணும் இடமெல்லாம் நீ
உடலினால் பிரிந்தாலும்-எம்
உள்ளத்தில் நிலைத்து வாழும் எம்மவனே
அன்பினால் கவர்ந்தாய் எம்மை
ஆறிடாத்துயரால் ஏங்கவே வைத்தாய் எம்மை
சென்ற நாள் நினைவை என்றும்
சிந்தையில் வைப்போம் உம்மை

என்றும் உம் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
மனைவி,மக்கள்
மருமகன், பேரன்

இலக்கம் 553, கந்தபுரம்,
கிளிநொச்சி.

(6240)

# கேள்வி அறிவித்தல்

## மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சு
## வடக்கு கிழக்கு மாகாணசபை

**சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கியின் நிதி உதவியினால் சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்படைந்த பிரதேசங்களை மீட்டெடுத்தலும் மீள் எழுதலுக்குமான திட்டம் (STAART)**

**உட்கட்டமைப்பு புனர்நிர்மாண திட்டம் (IRP)**

01. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசானது சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்படைந்த பிரதேசங்களை மீட்டெடுத்தலும் மீள் எழுதலுக்குமான (STAART) திட்டச் செலவின் பொருட்டு சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கி (JBIC) நிதி உதவித் திட்டத்தின் கீழ் கடன் தொகை ஒன்றினை பெற்றுள்ளதுடன் அந்நிதியின் ஒரு பகுதியினை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் பொருத்தமான செலவுகளை மேற்கொள்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| கேள்வி குறியீட்டு இல | வீதியின் பெயர் | இக்ராட் (வீதி) பதிவின் ஆகக் குறைந்த தரம் | மீள ளிக்கப் படாத கட்டணம் ரூபா | கேள்விப் பிணை ரூபா |
|---|---|---|---|---|
| STAART/NEP/MU/1 | வைத்தியசாலை வீதி | M7 | 1,500/- | 40,000/- |
| STAART/NEP/MU/2 | வண்ணான்குளம் வீதி | M8 | 1,000/- | 15,000/- |
| STAART/NEP/MU/5 | அலம்பல் கடற்கரை வீதி | M8 | 1,000/- | 15,000/- |

02. மேலே குறிப்பிட்ட வேலைகளுக்கான பொறி வைக்கப்பட்ட (Sealed) கேள்விகள் பிராந்திய கேள்விச் சபையின் சார்பில் வீதி அபிவிருத்தித் திணைக்கள வவுனியா பிரதம பொறியியலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

03. கேள்வி ஆவணங்களை வவுனியா கண்டி வீதியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி 2005.06.06 ஆம் திகதி முதல் 2005.06.22 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 9.30 முதல் பி.ப 3.00 மணி வரை பெற்றுக்கொள்ள முடியும்.

04 கேள்வி ஆவணங்களை மேற்கூறிய அலுவலகத்தில் கட்டணம் எதுவுமின்றி பார்வையிட முடியும்.

05. கேள்விகள் அவை சமர்ப்பிக்கும் நாளிலிருந்து 90 நாட்களுக்குச் செல்லுபடியானவையாகவிருத்தல் வேண்டும்.

06. கேள்விகள் மேலே கூறப்பட்ட கேள்விப்பிணையுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் பிணை ஆனது சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 118 நாட்களுக்கு செல்லுபடியாகுமாறு இருத்தல் வேண்டும்.

07. கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதி 2005.06.23 பி.ப 2.30 மணியாகும்.

08. பொறிவைக்கப்பட்ட கேள்விகள் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ முடிவு நேரத்திற்கு முன்பாக "தலைவர், கேள்விச்சபை, பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தித் திணைக்களம் வவுனியா" என்ற முகவரிக்கு கிடைக்கப் பெறத்தக்கதாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

09. கேள்விகள் யாவும் மேற்கூறிய முகவரியில் கேள்வி நேரம் முடிவுற்றவுடன் திறக்கப்படும்.

10. கேள்விகள் கோருவோரோ அல்லது அவர்களது அங்கீகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளோ கேள்விகள் திறக்கப்படும் போது சமுகமளிக்க முடியும்.

11. மேலதிக விபரங்களுக்கும் விளக்கங்களுக்கும் வவுனியா பிரதம பொறியியலாளரை 024-2222953 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

எந்திரி ரி. சிவராஜலிங்கம்,
பிரதமபொறியியலாளரும் தலைவரும்
பிராந்திய கேள்விச்சபை
வீதி அபிவிருத்தித் திணைக்களம்
வவுனியா.

(சி.12192)

# பா.ஜ.க தலைவர் பதவியிலிருந்து அத்வானி இராஜினாமா!

# “துரோகி” பட்டத்தின் பின் பதவி வேண்டாமென சூழுரை



(புதுடில்லி)

பாரதீய ஜனதா கட்சித் தலைவர் பதவியை எல்.கே அத்வானி நேற்று முன்தினம் இராஜினாமாச் செய்து விட்டார்.

இராஜினாமாச் செய்ததை வாபஸ் பெறும்படி வாஜ்பாய் உட்பட பா.ஜ. தலைவர்கள் அத்வானியிடம் வற் புறுத்தினார்கள். அதற்கு அவர் 'துரோகி' என்று கூறிய பின் பதவியில் நீடிக்க மாட்டேன் இராஜினாமாவை வாபஸ் பெற முடியாது என்று கூறி விட்டார்.

78 வயதான அத்வானி ஒரு ஆண்டுக்கு முன் அகில இந்திய பா.ஜ தலைவர் பதவியை ஏற்றார்.

அத்வானி தனது குடும்பத்தினரு டன் கடந்த ஒரு வாரமாக பாகிஸ் தானில் சுற்றுப்பயணம் செய்தார். நேற்று முன்தினம் அவர் டில்லி திரும்பினார். பாகிஸ்தான் சுற்றுப் பயணத்தின் போது பேசிய அத்வானி 'பாபர்மசூதி' இடிக்கப்பட்ட நாள் தான் தன் வாழ்க்கையில் துக்ககரமான தினம் என்று குறிப்பிட்டார்.

மறைந்த பாகிஸ்தான் நிறுவுனர் முகமது அலி ஜின்னாவின் நினை விடத்தில் மலர் வளையம் வைத்த அத்வானி பாகிஸ்தான் பாராளுமன்ற கூட்டத்தில் ஜின்னா பேசியதை நினைவு கூர்ந்தார்.

பாகிஸ்தானை மதசார்பற்ற நாடாக்குவேன். இந்து-முஸ்லிம்கள் இடையே பேதம் கிடையாது. அனை வரும் பாகிஸ்தான் குடிமக்கள் என்று ஜின்னா பேசியதாக குறிப்பிட்ட அத் வானி ஜின்னா ஒரு மதசார்பற்ற மனிதர் என்று கூறினார்.

அத்வானியின் இந்தப் பேச்சு விசுவ இந்து பரிஷத், ஆர்.எஸ்.எஸ் போன்ற அமைப்பு தலைவர்களுக்கு ஆத்தி ரத்தை ஏற்படுத்தியது.

ஜின்னா பற்றிப் பேசியதை அத் வானி வர்பஸ் பெற வேண்டும். இல் லாவிட்டால் அவர் பா.ஜ தலைவர் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ் இயக்கம் வற்புறுத்தியது.

அத்வானி இந்துக்களின் துரோ கியாகி விட்டார். அவர் பா.ஜ தலைவர் பதவியில் நீடிக்கக்கூடாது என்று விசுவ இந்து பரிஷத் தலைவர் கூறினார்.

ஆனால் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் போன்றவர்கள் அத்வா னிக்கு சார்பாக பேசினார்கள்.

மறைந்த சரோஜினிநாயுடு போன்ற வர்களே ஜின்னாவின் மதச்சார் பின்மை பற்றி பாராட்டி இருக்கிறார் கள். அத்வானி பேசியதில் தவறு இல்லை என்று வாஜ்பாய் கூறினார்.

டில்லி திரும்பிய அத்வானி இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு பதில் அளித்தார். பாகிஸ்தான் பாராளு மன்றத்தில் ஜின்னா பேசியதன் அடிப்படையில் தான் அவரை மதசார் பற்றவர் என்று கூறினேன். நான் பேசி யதில் தவறு இல்லை. எனவே அதை வாபஸ் பெறத் தேவையில்லை. இந்தச் சர்ச்சை பற்றி விவாதம் நடக்கட்டும் அதை நான் வரவேற் கிறேன் என்று கூறினார்.

அத்வானி விளக்கம் அளித்த பின்பும் ஆர்.எஸ்.எஸ் இயக்கம் அவரை துரோகி என்று கூறியது.

அதைத் தொடர்ந்து அத்வானி பா.ஜ பொதுச்செயலாளர் சஞ்சய் ஜோஷியின் வீட்டுக்குச் சென்றார். அவரிடம் ஒரு கடிதத்தை கொடுத்தார். அதில் தான் இராஜினாமாச் செய்வ தாகவும், அது ஏற்றுக்கொள்ளப்படும் என்று நம்புவதாகவும் கூறியிருந்தார்.

இந்த அதிரடி செய்தி காட்டுத்தீ போலப் பரவியது. அதைத் தொடர்ந்து பிரமோத்மகாஜன், சுஷ்மாசுவராஜ், ராஜிநாத்சிங், ஆனந்த்குமார், பால்ஆம்டே உட்பட பா.ஜ மூத்த தலைவர்கள் அத்வானி வீட்டுக்கு சென்றார்கள்.

மனாலியில் இருந்த வாஜ்பாய் நேற்று முன்தினம் மாலை டில்லி திரும்பினார். ராஜினாமாவை வாபஸ் பெற அத்வானி மறுத்துவிட்டதைத் தொடர்ந்து அத்வானி வீட்டில் திரண்டு இருந்த பா.ஜ தலைவர்கள் வாய்பாஜ் வீட்டுக்குச் சென்றனர். அங்கு வாஜ் பாயுடன் ஆலோசனை நடத்தி னார்கள். அத்வானி இராஜினாமா பற்றி விவாதிக்க பா.ஜ ஆட்சிமன்றக் குழுவும் கூட்டப்பட்டுள்ளது.

இராஜினாமாவை வாபஸ் பெற அத்வானி கடைசிவரை மறுத்து விட்டால் பா.ஜவுக்கு புதிய தலைவர் தேர்ந்து எடுக்கப்படுவார். அதை ஆட்சி மன்றக் குழு முடிவு செய்யும்.

ஏற்கனவே பா.ஜ தலைவராக இருந்த வெங்கையா நாயுடு தற்போது பா.ஜ துணைத்தலைவராக இருக் கிறார். அவர் மீண்டும் தலைவராக நியமிக்கப்பட வாய்ப்பு உள்ளது.

அத்வானி இராஜினாமா செய்துவிட்டதால் பா.ஜ தலைவர் பொறுப்பை வெங்கையா நாயுடு தற்காலிகமாக ஏற்கிறார்.

அத்வானி ராஜினாமாவை வாபஸ் பெறுவாரா என்பது இன்னும் இரண்டு நாட்களில் தெரிய வரும்.

## குஜராத்தில் பட்டாசு வெடித்துக் கொண்டாட்டம்

## பா.ஜ விசுவ இந்துபரிஷத் தொண்டர்கள் மோதல்;

(அகமதாபாத்)



ஜின்னாவை புகழ்ந்து பேசிய விவகாரத்தில் அத்வானி பாரதீய ஜனதாத் தலைவர் பதவியில் இருந்து விலகியதை குஜராத் மாநிலத்தில் விசுவ இந்து பரிஷத் தொண்டர்கள் பட்டாசு வெடித்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்து கொண்டாடினார்கள்.

அகமதாபாத்தில் பல இடங்களில் சாலைகளை வழி மறித்து பட்டாசு வெடித்தனர். இதை பாரதீய ஜனதா தொண்டர்கள் கண்டித்த போது இரு தரப்பினருக்கும் கைகலப்பு ஏற்பட்டது.

அகமதாபாத்தின் கட்லோடியா பகுதியில் பாரதீய ஜனதா ஆதரவாளர்களுக்கும், விசுவ இந்து பரிஷத் தொண்டர்களுக்கும் மோதல் ஏற்பட்டது.

உடனே பொலிசார் தலையிட்டு அவர்களை சமரசப்படுத்தி நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தனர். மோதலில் ஈடுபட்ட விசுவ இந்து பரிஷத் தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்.


## கற்கை நெறிகள் ஆரம்பம்

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத் தின் ஊடாக நோர்வே நிதி உதவியுடன் முல்லை மாவட்ட பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறு வனத்தில் கணினி இலத்திரனியல் கற்கை நெறிகள் 10.06.2005 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளதால் இக்கற்கை நெறிகளுக்கு தோற்ற இருக்கும் மாணவிகள் (கிளி. மாவட்டத்துக்கு போக்குவரத்து வசதியும், பிறமாவட்டங்களுக்கு தங்குமிடவசதியும் இலவசமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது). கீழ்க் காணும் முக வரிக்கு நேரில் சமுகம் தரவும்.

தொடர்புகளுக்கு:-

பெண்கள்அபிவிருத்தி புனர்வாழ்வு
நிறுவனம்,
முதன்மைச் செயலகம்,
யாழ்.சாலை, கிளிநொச்சி.

(6239)


## அத்வானியின் இராஜினாமாவை

## சிவசேனை – விசுவ இந்து பரிஷத் வரவேற்பு

(புதுடில்லி)

அத்வானி இராஜினாமாச் செய் ததை சிவசேனை மற்றும் விசுவ இந்து பரிஷத் கட்சிகள் வரவேற்று உள்ளன.

அத்வானியின் ராஜினாமா பற்றி விசுவ இந்து பரிஷத் தலைவர் பிரவீன் தொகாடியா கூறியதாவது:-

அத்வானி பா. ஜ. தலைவர் பதவியிலிருந்து விலக முன் வந்தி ருப்பது வரவேற்கத்தக்கது. இது துரோகத்திற்கு எதிராக தேசப் பற்றுக்கு கிடைத்த வெற்றி ஆகும்.

ஜின்னாவின் மதசார் பின்மைக்கு சான்றிதழ்கொடுப்பது துரோகச் செயல் ஆகும். எனவே அத்வானி ராஜினாமா செய்ய முடிவு எடுத்தது சரியான நட வடிக்கைதான். ஜின்னா மதசார்பற்ற வர் என்பது போன்ற கருத்துக்களை ஆதரிப்பவர்களுக்கு அத்வானியின் ராஜினாமா ஒருபாடமாக இருக்கும். எனக் கூறினார்.

பா.ஜ. கூட்டணி கட்சியான சிவ சேனை இயக்கத்தின் அதிகாரபூர்வ பத்திரிகையான 'சாம்னா' தனது செய்தியில் ஜின்னாவை புகழ்வதன் மூலம் தன்னை மதசார்பற்றவராக காட்டிக்கொள்ள விரும்புகின்றவரை 80 கோடி இந்துக்கள் துரோகியாகத்தான கருதுவார்கள். ஜின்னா தனது சொந்த நலனுக்காக தனி பாகிஸ் தான் உருவாக வேண்டும் என்று விரும்பினார்.

ஜின்னாவை புகழ்வதோடு மட்டும் அத்வானி நிறுத்திக்கொள்ள வில்லை. பாபர் மசூதியை இடித்ததற் தாக பாகிஸ்தான் முஸ்லிம்களிடம் மன்னிப்பும் கேட்டார்.

பாபர்மசூதி இடிக்கப்பட்ட நாள் தான் தனது வாழ்க்கையின் துக்க கரமான நாள் என்று அத்வானி கூறி யது அவரது இதயத்தின் குத்துக் கரணம் ஆகும். இந்துக்களின் சுய மரியாதையை அடகுவைத்து எந்த ஆதாயத்தையும் தேடக்கூடாது.

இந்துத்துவ கொள்கையில் சிவசேனை உறுதியாக இருக்கிறது. இந்துத்துவா என்பது தேசியம். இந்துத்துவா கொள்கையால் யாராவது துன்பப்பட நேர்ந்தால் அவ ரைப்பற்றி கவலைப்படத் தேவை யில்லை. அவர் பாகிஸ்தானில் உள்ள தனது கல்லறையில் போய் அமைதியாக தூங்கலாம். என்று அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


யாழ் நகரில் புதிய தோர் உதயம்

மங்களகரமான புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

மகா சில்க்ஸ் ஸ்தாபனத்தின் கிளை நிறுவனமான





அன்புடையீர்,
நிகழும்
பார்த்தீப வருஷம்
09.06.2005
வியாழக்கிழமை
காலை ஆறு மணி
முதல் 8.15
மணிக்குள் வரும்
சுப முகூர்த்த
வேளையில்

கவுஸ் ஒவ் செலெக்ஷன்



என்னும் புடவை ஸ்தாபனம் ஒன்றை யாழ். பெரிய கடை வீதி 75B இலக்க கட்டடத்தில் ஆரம்பிக்கவுள்ளதால் அத்தருணத்தில் எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் வருகை தந்து திறப்பு விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சுபமுகூர்த்த பட்டுப்புடவைகளுக்கும் மற்றும் சல்வார், சோலிக்கிற், ஸ்கேட் அன் பிளவுஸ், சூட்டிங், சேட் சிறுவர்களுக்கான ஆடைகளுக்கும் நாடவேண்டிய மகத்தான ஸ்தாபனம்

கவுஸ் ஒவ் செலெக்ஷன்,
இல75B பெரியகடை வீதி.
யாழ்ப்பாணம்.

(சி.12190)

# அவுஸ்திரேலிய அணிபங்கேற்கும் 20இற்கு 20 ஓவர் கிரிக்கெட் போட்டி



இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இன்று கிரிக்கெட் அதிகாரிகள் சங்கத்தினரின் பதினொருபேர் கொண்ட அணியுடன் 20இற்கு இருபது ஓவர் போட்டியொன்றில் மோதவிருக்கின்றது.

20இற்கு இருபது அணிக்கு நியூசிலாந்து அணித்தலைவர் ஸ்ரீபன் பிளமிங் தலைமை வகிப்பார்.அத்துடன் முன்னாள் பிரபல வீரர்களான டெவன்மல்கம், கிறிஸ்லூயிஸ் ஆகியோரும் அணியில் அங்கம் வகிப்பர். ஹம்ஷயர் அணி வீரரும் இங்கிலாந்து அணியில் தற்போது ஆடி வரும் கெவின் பீட்டர்சன்னும் இந்த அணியில் இணைக்கப்பட்டுள்ளனர். இது பற்றி அவர்குறிப்பிடும் போது இப்போட்டியில் பங்கேற்க தனக்கு மிக்க வாய்ப்புக் கிடைத்தமை ஆச்சரியமளிப்பதாகவும், அத்துடன் அவுஸ்திரேலியா தற்சமயம் உலக தர வரிசையில் முதலிடம் வகிக்கின்றது. அவர்களுக்கு எதிராக ஆடுவது மகிழ்ச்சியளிப்பதாகவும் 20 ஓவர் போட்டி என்பதால் பல வாண வேடிக்கைகளைப் பார்க்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த அணியில் டர்காம் கழக வீரரான போல் கொலிங்வூட்டும் இணைக்கப்பட்டுள்ளார். அருண்டேலில் நடைபெறும் இப்போட்டிக்காக இதுவரை அவுஸ்திரேலியா தனது அணியை அறிவிக்கவில்லை. எனினும் வரும் திங்களன்று நடைபெறும் இங்கிலாந்துடனான 20 ஓவர் கொண்ட சர்வதேசப் போட்டியில் பங்கேங்கும் அணியே இன்றைய போட்டியிலும் பங்கேற்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் போட்டியின் மூலம் வசூலாகும் நிதி அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்கும், இங்கிலாந்தின் கிரிக்கெட் அதிகாரிகள் சங்கத்திற்கும் பகிர்ந்தளிக்கப்படும். இந்த நிதியை ஹம்ஷயர், சகெக்ஸ்கழக இளம் கிரிக்கெட் வீரர்கள் சங்கத்துக்கும் வழங்கப்படும்.

# கிரிக்கெட்டுக்காக மேலும் அர்ப்பணிக்க வேண்டும் ஓய்வு பெறும் நடுவர் ஷெப்பேட் ஆதங்கம்



மேற்கிந்திய தீவுகள் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டிகளின் பின்னர் ஓய்வில் செல்லும் உலகின் தலை சிறந்த போட்டி நடுவரான டேவிட் ஷெப்பேட் அத்துடன் தனது கிரிக்கெட் வாழ்க்கை நிறைவு பெற்றுவிடவில்லை என்றும் தான் மேலும் கிரிக்கெட்டுக்காக எதனையும் செய்யவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்று முடிந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியின் பின்னர் மேலும் குறிப்பிடும் போது கிரிக்கெட் தனது வாழ்க்கை என்றும் மேலும் கிரிக்கெட்டுக்காக எதையாவது செய்ய விரும்புவதாகவும், ஆயினும் இந்த நேரத்தில் அது என்ன என்பதை கூற முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

அச்சந்தர்ப்பத்தில் மேற்கிந்தியத்தீவுகள் வீரர் பிரையன் லாரா "பணிக்கு நன்றி" என குறிப்பிடப்பட்ட துடுப்பை (bat) அன்பளிப்புச் செய்தார்.

குளுசெஸ்ட்சயர் அணியின் வீரரான டேவிட் ஷெபேட் 92 டெஸ்ட் போட்டிகளிலும், மூன்று உலகக் கிண்ணப் போட்டிகளிலும் பங்கேற்றுள்ளார்.

இந்த டெஸ்ட் போட்டியுடன் அவர் ஓய்வில் சென்ற போதும் இவ் வருடம் இங்கிலாந்தில் நடைபெறும் ஐந்து ஒருநாள் போட்டிகளுக்கு அவர் நடுவராகப் பணியாற்றுவார் எனத்தெரிவிக்கப்படுகிறது.

விளையாட்டு

# உணர்ச்சிகரமான பயணம் உருகுகிறார் புக்கானன்



அவுஸ்திரேலிய வீரர்கள் மரண்மடைந்த இடத்திற்கு சென்று திரும்பியது உணர்ச்சிகரமான ஒன்று என்கிறார் ஆஸி.,அணி பயிற்சியாளர் ஜோன் புக்கானன்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி வரும் ஜூலையில் இங்கிலாந்து அணியுடன் 'ஆஷஸ் தொடரில்' பங்கேற்கவுள்ளது. இந்தத் தொடருக்கு முன்னதாக மனரீதியிலான வலிமை பெற பிரான்சிலுள்ள வில்லியர்ஸ் 'பிரிட்டோனியக்ஸ்' என்ற இடத்திற்கு ஆஸி.,அணி வீரர்கள் சென்றிருந்தனர். 1918 இல் இங்கு நடந்த போரில் ஆயிரக்கணக்கான அவுஸ்திரேலிய போர் வீரர்கள் மரணமடைந்திருந்தனர். இந்த வரலாற்றைக் குறிக்கும் 'பிரான்கோ-அவுஸ் திரேலியன்' மியூசியம் ஒன்றும் இங்கு உள்ளது. போரில் மாண்ட வீரர்களுக்கு தங்களின் அஞ்சலியை செலுத்திவிட்டு வந்திருக்கின்றனர். ஆஸி., வீரர்கள். இந்தப் பயணத்திற்கு பிறகு பயிற்சியாளர் புக்கானன் கூறுகையில், " கிரிக்கெட் வாழ்க்கையை மீறி ஒரு உணர்ச்சிகரமான மனித நேயத்தை எங்களால் உணர முடிந்தது. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு காலிப்போலி சென்ற போதும், இதே நிலையை உணர்ந்தோம். ஒரு வலுவான தொடரை சமாளிக்கும் மன தைரியத்தை இங்கே நாங்கள் பெற முடிந்தது" என்றார்.



ஐதராபாத் டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா இப்போது உலக அளவில் கலக்கி வருகிறார். இந்த நிலையில் அவரது 11 வயதுத் தங்கை அனம் மிர்சாவும் விளையாட்டுப் போட்டிகளில் களமிறங்கியிருக்கிறார்.ஆனால் அக்காவைப் போல் டென்னிசை தேர்ந்தெடுக்கவில்லை. அவர் நுழைந்திருப்பது துப்பாக்கி சுடும் போட்டி என்பது குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் ஒருதடவை முரளிதரன் உடற் தகுதியை நிரூபிக்க வேண்டும்!



இங்கிலாந்தின் லங்காசயர் அணிக்காக விளையாடிவரும் சிறிலங்காவின் பிரபல சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் அங்கு நடைபெற்ற ஒரு நாள் போட்டியொன்றின் போது காயமடைந்ததால் மீண்டும் ஒரு உடற்தகுதி சோதனைக்குட்படுத்தப்படவுள்ளார்.

இவருக்குப் பதிலாக அணியில் சஜித் மக்மூட் என்ற வீரர் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

இவர் தொடர்ந்து தமது அணிக்காக ஆடுவது சந்தேகம் என அவ்வணியின் முகாமையாளர் மைக் லட்கின்சன் தெரிவித்துள்ளார். முரளிதரன் இம்முறை நடைபெறும் கவுண்டிப் போட்டிகளில் 29 விக்கெட்டுக்களைப் பெற்றுள்ளார். அது சராசரி 16 ஆகும். இவரது வரவின்மை தமது அணிக்கான வெற்றியைச் சிந்திக்கவைப்பதாக அணித்தலைவர் மார்க்ஷில்டன் தெரிவித்துள்ளார்.



உலக சாதனைக்காக ஒரேமைதானத்தில் 1,42,000 கால்பந்துகளை அடுக்கி அரங்குகளுக்கு அழகூட்டுகிறது ஜேர்மனியைச்சேர்ந்த கால்பந்து தயாரிப்பு நிறுவனம். ஜேர்மனியிலுள்ள ஒரு மைதானத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் 2006 உலகக்கோப்பை கால்பந்துப்போட்டித் தலைவர் பிரான்ஸ் பெக்கன்பார் (இடது) ஜேர்மனி தேசிய அணியின் பயிற்சியாளர் ஆலிவர் பியரா. ்.ப்.

# யுகானா தோள்பட்டைக்காயத்தால் அவதி



தனது தந்தையின் சுகவீனம் காரணமாக மேற்கிந்தியத்தீவுகளுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பங்கேற்காது நாடு திரும்பிய பாகிஸ்தான் வீரர் யுசுப் யுகானா தற்போது மேலும் ஒருபிரச்சினைக்கு ஆளாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவருக்குத் தற்போது தோள் பட்டையில் ஏற்பட்டுள்ள காயத்துக்கு சிகிச்சைபெற வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.இது தொடர்பாக யுகானா கூறும் போது சுமார் இருவருடங்களாக தனக்கு தோள்பட்டையில் பிரச்சினை இருந்து வந்ததாகவும்; தற்போது துடுப்பு மட்டையைத் தூக்கி ஆடமுடியாத அளவு வேதனை அளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.பாகிஸ்தான் அணிக்குப் பெரும் பக்க துணையாக இருக்கும் யுகானா 59 டெஸ்ட் போட்டியில் பங்கேற்று 47.46 என்ற சராசரியைப் பெற்றுள்ளார். மற்றும் 199 ஒரு நாள் போட்டிகளிலும் பங்கேற்றுள்ளார். அவரது பங்களிப்பின்றி மேற்கிந்தியத்தீவுகளுடனான டெஸ்ட் போட்டியை பாகிஸ்தான் ஒன்றுக்கு ஒன்று என்ற கணக்கில் சமன் செய்தது குறிப்பிடத்தக்கது.



ஜுவென்டால் (இத்தாலி) எ. ்.ப்சி டோக்கியோ (ஜப்பான்) அணிகளுக்கிடையே டோக்கியோவில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற காட்சி கால்பந்தாட்டத்தில் ஜுவென்டாஸ் வீரரின் முயற்சியைத்தடுக்க முயல்கிறார் யாசுயூகி கொன்னோ (வலது).







மாணவர் எழுச்சிநாளை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத்துறையும், கிளிநொச்சி மாவட்ட மாணவர்அமைப்பும் இணைந்து நடாத்திய மரதன்ஓட்டம், மற்றும் துவிச்சக்கரவண்டி போட்டிகளில் முதலிடங்களைப் பெற்றமாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் பரிசாக வழங்கப்பட்டன. (படஙகள - சோதி)



**சிந்தனைக்கு**

நான் எப்போதும் பேச்சுக்குத் தருவது குறைந்தளவு முக்கியத்துவமே; செயலால் வளர்ந்த பின்பு தான் நாம் பேசத் தொடங்க வேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 09-06-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## கேள்விக் குறியாகும் யுத்த நிறுத்தம்?

போராளிகளின் பாதுகாப்பான போக்குவரத்து, பாதுகாப்பான நடமாட்டம் என்பன சரியாக உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். இது நெருக்கடிக்கு உள்ளாக்கப்படுமாக இருந்தால் யுத்த நிறுத்தச் சூழல் முழு அளவில் கேள்விக்குறியாக மாறிவிடும் என்ற அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களின் எச்சரிக்கையானது யதார்த்தத்தின் பிரதி பலிப்பாகும்.

யுத்த நிறுத்த உடன்பாட்டின்படி இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் போராளிகளின் போக்குவரத்து, நடமாட்டம் என்பவற்றிக்கு சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பே உத்தரவாதம் அளித்தல் வேண்டும். இது யுத்த நிறுத்த உடன்பாட்டின பாற்பட்டதாகும். ஆனால் அப்பணியை சிறிலங்கா ஆயுதப்படைத் தரப்பு தற்பொழுது மேற்கொள்ளாது இழுத்தடிப்புச் செய்து வருகின்றது.

சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பின் இந்நடவடிக்கையானது யுத்த நிறுத்தத்திற்குகெதிரான திட்ட மிட்ட பல தொடர் நடவடிக்கைகளின் ஒன்றாகவே தற்பொழுது எண்ண வைக்கிறது. அதாவது அண்மைக் காலத்தில் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு அச்சுறுத்தல் விடுக்கும் பல நடவடிக்கைகளின் ஓர் அங்கமாகவே அது நோக்கத்தக்கதாகும்.

யுத்த நிறுத்த உடன்பாடு இன்று பல்வேறு வகையிலும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. சிறப்பாகக் கூறுவதனால் இவ் யுத்த நிறுத்த உடன்பாடு கைச்சாத்தாகிய 2002 ஆண்டு பெப்ரவரி மாதத்தில் இருந்து இன்று வரையிலான காலப்பகுதியில் தற்பொழுது உள்ளது போன்றதொரு நெருக்கடியான நிலையை யுத்த நிறுத்த உடன்பாடு சந்திக்கவில்லை என்றே கூறலாம்.

ஏனெனில் இக்காலப்பகுதிக்குள் என்றுமில்லாதவாறு அமைதிச் சூழ்நிலைக்குப் பெரும் பங்கம் ஏற்பட்டுள்ளது. ஒரு புறத்தில் நாட்டின் பல பகுதியிலும் படுகொலைகள் இடம் பெற்று வருகின்றன. இதற்கு அரசாங்கம் விடுதலைப்புலிகளுக்கெதிராக மேற்கொண்டு வரும் மறைமுக யுத்தமே அடிப்படையாகும் என்பதில் கேள்விக்கு இடமில்லை.

மறு புறத்தில் இத்தகைய படுகொலைகளைச் சாட்டாக வைத்து தேடுதல் என்ற பெயரில் சிறிலங்காஆயுதப்படைத்தரப்பு வீதிச் சோதனைகளையும், தேடுதல்களையும் முடுக்கிவிட்டுள்ளது. அத்தோடு விடுதலைப்புலிகளின் அலுவலகங்கள் மீதும் திடீர் சோதனைகளை மேற்கொள்வதன் மூலம் பதற்றத்தை உருவாக்கி வருகின்றது.

இதற்கும் அப்பால் திருமலை நகரில் அமைக்கப்பட்ட புத்தர்சிலை விவகாரமானது அங்கு இனங்களுக்கிடையிலான முறுகல் நிலையைத் தோற்றுவித்திருப்பதோடு இதனைச் சாட்டாகக் கொண்டு திருமலையில் மேலும் இராணுவத்தினரை அரசு குவித்துள்ளமை பதற்றத்தை உச்ச நிலையடையச் செய்துள்ளது.

அதாவது யுத்த நிறுத்த உடன்பாட்டின் பிரதான நோக்கங்களில் ஒன்றாகிய இயல்பு நிலையைத் தோற்றுவித்தல் என்பது சிறிலங்கா அரசின் நடவடிக்கைகளால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இதனால் தமிழர் தாயகப்பகுதி எங்கும் படிப்படியாக பதற்ற நிலை அதிகரித்து வருகின்றது. மறுவளமாகக் கூறுவதனால் மக்கள் யுத்த நிறுத்தத்தில் நம்பிக்கை இழந்துவிட்டனர்.

இந்நிலையில் அரசாங்கமும் நெருக்கடியைச் சீர்செய்யும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டதாக இல்லை. மாறாக நெருக்கடி நிலையையும் பதற்றத்தையும் அதிகரித்துச் செல்வதாகவே அதன் அணுகுமுறையுள்ளது. எடுத்துக்காட்டாகத் தற்பொழுது திருமலை புத்தர்சிலை விவகாரத்தையும், போராளிகளின் பயண ஒழுங்குகளையும் சந்திரிகா அரசாங்கம் கையாளும் முறையை சுட்டிக்காட்டமுடியும். அதாவது பிரச்சினைக்குத் தீர்வு காணாது அதனை மேலும் வளர்த்தெடுக்கவுமே அது முற்பட்டு நிற்கின்றது.

அரசாங்கத்தின் இத்தகைய போக்கானது விடுதலைப்புலிகள் இயக்கத்தை யுத்தத்திற்குள் தள்ளுவதற்காணாதே. இது ஏற்கனவே புரியப்பட்டதொன்றே. இவ்வாறு யுத்தத்தை வலிந்து திணித்தல் என்பது சனாதிபதி சந்திரிகாவின் அரசியல் நகர்வுகளுக்கும் அவரை நெருககடியில் இருந்து விடுபடுவதற்கும் சில வேளை உதவக் கூடுமே ஒழிய நாட்டை ஐக்கியப்படுத்தவும் ஒருமைப்படுத்தவும் உதவமாட்டாது.

# தேசியத்தலைவர் எடுக்கவுள்ள முடிவை நாம் முழு மனதுடன் ஏற்கின்றோம்

*யாழ். தேசிய எழுச்சிப் பேரவை தீர்மானம்*

(தென்மராட்சி)

தீர்க்க தரிசனம் மிக்க எமது தேசியத்தலைவர் எடுக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவை நாம் முழு மனதுடன் ஏற்கின்றோம் என்று நேற்று முன்தினம் கைதடியில் நடைபெற்ற தேசிய எழுச்சிப் பேரவையின் பிரதேச சங்கம நிகழ்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எமது தமிழ் இனத்தின் உயிர் மூச்சாய் விளங்கும் எமது தீர்க்க தரிசனம் மிக்க எமது தேசியத் தலைவர் எடுக்கவிருக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவை நாம் முழு மனதுடன் ஏற்கின்றோம் என நேற்று முன்தினம் கைதடி முத்துக்குமார சுவாமி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வில் பேராளர்கள் தீர்மானம் நிறைவேற்றினர்.

ச.தங்கராசா (தே.எ. பேரவை துணைச் செயலாளர் கைதடிப் பிரதேசம்) தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தே. எ. பேரவையில் யாழ். மாவட்ட செயலாளர் சொலமன் சூசிறில், கைதடி தேசிய எழுச்சிப் பேரவையை சார்ந்த அப்புத்துரை கந்த சாமி, கைதடிப் பிரதேச அரசியல துறைப் பொறுப்பாளர் பஞ்சலிங்கம், தென் மராட்சிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் பொ. ஈஸ்வரன் மற்றும் பெருந்தொகையான பேராளர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (28)

# தலதா மாளிகை முன் அரைக் கம்பத்தில் சிறிலங்காவின் தேசியக்கொடி பறந்தது

*–ஹெல உறுமய பிக்குகள் போராட்டம்*

(கொழும்பு)

கண்டி தலதா மாளிகைக்கு முன்னால் உள்ள கொடிக்கம்பத்தில் ஏற்றப்பட்டிருந்த சிறிலங்காவின் தேசியக் கொடியை பொதுக் கட்டமைப்பிற்கு எதிராக உண்ணாவிரதம் இருக்கும் புத்த பிக்குகள் கொடியை இறக்கி அரைக் கம்பத்தில் பறக்கவிட்டுள்ளதாக ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்துவதை எதிர்த்து ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஓமல்பே சோபித்த தேரர் கண்டி தலதா மாளிகைக்கு முன்னால் கூடாரம் அமைத்து உண்ணாவிரதம் இருந்து வருகின்றார்.

செவ்வாய்க்கிழமை சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க கண்டிக்கு விஜயம் செய்து ஓமல் பேசோபித்த தேரரை சந்திப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்த வேளை அதனைக் குறிக்கும் முகமாக தலதா மாளிகைக்கு முன்னால் உள்ள கொடிக் கம்பத்தில் சிறிலங்காவின் தேசியக் கொடி ஏற்றப்பட்டிருந்தது.

இது தொடர்பாக அவ் வேளையில் அங்கு வந்த தேசிய சம்மேளனத்தின் புத்த பிக்கு ஒருவர் ஊமல் பே சோபித்த தேரர் நாட்டின் இறைமைக்காக சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கின்றார். எனவே இது எமக்கு துக்ககரமான நாள். தேசியக் கொடி அரைக் கம்பத்திலேயே பறக்க வேண்டும் எனத் தெரிவித்து அரைக்கம்பத்திலேயே பறக்கவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அங்கு காவல் கடமைகளில் ஈடுபட்டிருந்த பொலிசார் புத்தபிக்குகளுக்கு சந்திரிகாவின் வருகை குறித்து தெரிவித்து தேசியக் கொடியை முழுமையாகப் பறக்கவிட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

இந்த நிலையில் பொலிசாருக்கும், பிக்குகளுக்கும் இடையில் வாய்த்தர்க்கமும் இடம்பெற்றுள்ளது.

## பேச்சு வார்த்தைகள் மூலமாக முரண்பாட்டை தவிர்க்க முயலுங்கள்

*–பிக்குகளுக்குப் பிரதமர் ஆலோசனை*

(கொழும்பு)

போராட்டங்கள் நடத்துவதைத் தவிர்த்து பேச்சுவார்த்தைகளின் மூலமாக முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு முயலுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். தலதாமாளிகையின் முன்னால் உபவாசத்தில் ஈடுபட்டுள்ள ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் ஓமல் பேசோபித்த தேரரை நேற்று முன்தினமிரவு பார்க்கச் சென்ற போதே பிரதமர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

பிரதமரின் வேண்டுகோளுக்குப் பதிலளித்த ஓமல்பே சோபித்த தேரர் பொதுக் கட்டமைப்புத் தொடர்பான யோசனைகளை வாபஸ் பெறுமாறும் அதன் பின்னரே பேச்சுவார்த்தை நடத்த முடியுமெனவும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே உண்ணாவிரதப் பேராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஓமல்பே சோபித்த தேரர் நேற்று முன்தினம் முதல் நீராகாரங்களை மட்டுமே உட்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# சிறிலங்காவின் அரசியல் வரலாற்றில் இறுதி பண்டார நாயக்கவாக வேண்டாம்

**– சனாதிபதிக்கு ஜே.வி.பி தலைவர் எச்சரிக்கை**

(கொழும்பு)

சிறிலங்கா அரசியல் வரலாற்றில் இறுதி பண்டாரநாயக்கவாக வேண்டாம் என ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க சனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர், அனைத்து இனமக்களையும் பிரித்து தமது அரசியல் வாழ்க்கையை தாமே முடிவுக்கு கொண்டு வருவதற்கு சனாதிபதி முயன்றுகொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

சனாதிபதிக்குப் பின்னர் மற்றும் ஒரு பண்டாரநாயக்க அரசியலில் நிலைக்க முடியுமா? என்பதை சனாதிபதியின் தற்போதைய நடவடிக்கைகளே தீர்மானிக்கப்போவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

ஜே.வி.பி.யை அரசாங்கத்தில் இருந்து வெளியே தள்ளிவிட்டு நாட்டை பிரிப்பதற்கு சிலர் முயல்வதாகக் குற்றம் சுமத்திய சோமவன்சஅமரசிங்க சனாதிபதி தம்மை மீறி பொதுக்கட்டமைப்பில் எவ்வாறு கைச்சாத்திடுவார் என தாம் பார்க்கப்போவதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

## 32 மணித்தியாலயங்களுக்குள் ஒருவர் மேல் மாகாணத்தில் கொலை!

(கொழும்பு)

மேல்மாகாணத்தில் ஒவ்வொரு 32 மணித்தியாலயத்துக்கும் ஒருவர் கொலை செய்யப்படுவதாக சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டில் இடம்பெறும் குற்றச் செயல்களில் 46 வீதமானவை மேல் மாகாணத்தில் இடம்பெறுவதாகத் தெரிவித்துள்ள அவர், இப்பிரதேசத்துக்குள் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் இதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியமானது என்றும் கூறியுள்ளார். மேலும், இது தொடர்பாகத் தமக்குக் கிடைக்கும் தகவல்கள் 27 வீதமானவை போலியானவை என்றும் தெரிவித்துள்ளார்.

விசாரணைகளின் போது சாட்சியாளர்கள் சாட்சியமளிக்கத் தவறுவதனால் பெரும் எண்ணிக்கையான குற்றவாளிகள் தப்பிச் செல்கின்றனர் என்றும் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## ஜே.வி.பி படுதோல்வி

(கொழும்பு)

ஜே.வி.பி.யின் கோட்டை எனத் தெரிவிக்கப்பட்டு வந்த திஸ்ஸ மகாராமை தேர்தல் தொகுதியில் நடைபெற்ற கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் ஜே.வி.பி. தரப்பு படுதோல்வியடைந்துள்ளது.

இறுதியாக நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது தமது வரலாற்றில் முதல் முறையாக தனிக்கட்சியாக ஜே.வி.பி.யினர் திஸ்ஸ மகாராமை பிரதேச சபையின் அதிகாரத்தை கைப்பற்றினர்.

எனினும், கடந்த வாரம் திஸ்ஸ மகாராமை தேர்தல் பிரிவில் நடைபெற்ற கூட்டுறவுச் சங்க தேர்தலின் போது தேர்தல் நடைபெற்ற 24 சங்கங்களின் 23 இல் ஜே.வி.பி. தரப்பு தோல்வியடைந்துள்ளது.

# கொழும்பில் தமிழர் வாழும் பகுதிகளில் சிறிலங்காப்படையினர் திடீர் தேடுதல்!

## இளைஞர்கள் சிலர் கைதாகினர்

(கொழும்பு)

கொழும்பு மாநகரில் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை முதல் நள்ளிரவுக்குப் பின்னரும் சிறிலங்கா குற்றப்புலனாய்வுப்பிரிவினரும், பொலிசாரும் இணைந்து திடீர் தேடுதல்களை மேற்கொண்டதுடன் பரவலாக கைதுகளும் இடம்பெற்றுள்ளன. வெள்ளவத்தை,தெகிவளை, கொட்டாஞ்சேனை போன்ற பகுதிகளில் இந்தத் தேடுதல்களும் கைதுகளும் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கொட்டாஞ்சேனைப் பகுதியில் இரவு ஏழு மணியளவில் வீதிகளில் குவிக்கப்பட்ட பொலிசார் இராணுவத்தின் உதவியுடன் உந்துருளிகளில் பயணம் செய்தவர்களைத்தடுத்து நிறுத்தி தீவிர சோதனை நடத்தியதுடன் சிலரைக் கைது செய்துமுள்ளனர்.

இதேவேளை வெள்ளவத்தை மற்றும் தெகிவளைப் பிரதேசங்களில் குறிப்பாக தமிழ் இளைஞர்கள் வாடகைக்கு இருக்கும் இடங்களுக்குச் சென்ற குற்றப்புலனாய்வுப் பொலிசார் அங்கிருந்தவர்களின் விபரங்களைப் பெற்றிருப்பதுடன் சில இடங்களில் சில இளைஞர்களைக் கைது செய்துமுள்ளனர்.

# விளக்கமறியலிலுள்ள சிப்பாய்களை பார்வையிட பெற்றோருக்கு அனுமதி

(மட்டக்களப்பு)

கிழக்கில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சட்ட விரோதமான முறையில் நுழைந்து வேவு பார்த்தார்கள் என்ற குற்றத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தமிழீழ நீதிமன்ற உத்தரவின் பேரில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள மூன்று சிங்கள ஊர்காவல் படையினரை அவர்களது பெற்றோர்கள் கடந்த திங்களன்று சென்று பார்வையிட்டனர்.

கடந்த 24 ஆம் திகதி இரவு முதியன்சலாகே, சமிந்த சூரியபெரும ஆராச்சிகே ஜானக பிரதீப்குமார் மற்றும் அத்தநாயக்கா முதியன்சலாகே சமிந்தகுமார ஆகிய இம்மூவரும் மட்டக்களப்பு- அம்பாறை மாவட்ட எல்லையை அண்டிய பிரதேசத்தில் விடுதலைப்புலிப் போராளிகளினால் கைது செய்யப்பட்டமை தெரிந்ததே.

# லெப்.கேணல் சாள்ஸ் நினைவாக போராளிகளுக்கிடையில் மரதன் போட்டி

(புதுக்குடியிருப்பு)

கடற்புலிகளின் தாக்குதல் அணித் தளபதிகளில்ஒருவரான லெப். கேணல் சாள்ஸ்சின் பன்னிரெண்டாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கடற்புலிகள் விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி வருகின்றனர்.

இந்த வகையில்நேற்றுக் காலை சுமார் 6.00 மணிக்கு புதுகுடியிருப்பில் மரதன் ஓட்டப் போட்டிஆண்,பெண் இருபாலாருக்கும் இடம்பெற்றது.

துப்பாக்கியை ஏந்தியவாறு ஒடும் இம் மரதன் ஓட்டப்போட்டி புதுக்குடியிருப்பு மாவீரர் நினைவு மண்டபத்தில் ஆரம்பமாகி முல்லைத்தீவில் முடிவடைந்தது.

போட்டியினை கடற்புலிகளின் நிர்வாகப் பொறுப்பாளர் கண்ணதாசன் நிதர்சனம் மகளிர் பொறுப்பாளர் பிரமிளா ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

இந் நிகழ்வில் கடற்புலிகளின் துணைத்தளபதி செழியன் கடற் புலிகளின் மகளிர் படையணி சிறப்புத் தளபதி உட்படபொறுப்பாளர்கள், போராளிகள்,பொதுமக்கள்கலந்து கொண்டுசிறப்பித்தனர். (08)

# உந்துருளியில் பயணித்தவர்கள் பேருந்துடன் மோதினர்

## சிறுகாயங்களுடன் தப்பினர்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்திப் பகுதியில் நேற்று பயணிகள் பேருந்தும், உந்துருளி ஒன்றும் விபத்துக்குள்ளாகியுள்ளது.

மேற்படி சம்பவமானது நேற்றுக் காலை பத்து மணியளவில் இடம் பெற்றுள்ளது. வீதியின் அருகில் தரித்து நின்ற பேருந்து திரும்பிச் செல்வதற்காக பிரதான வீதியை அடைந்தபோது கிளி.நகர் பகுதியில் இருந்து பரந்தன் நோக்கிச் சென்று கொண்டிருந்த உந்துருளி ஓட்டுநர் வீதியில் நுழைந்த பேருந்தை அவதானிக்காத வேளையே மேற்படி சம்பவம் இடம் பெற்றுள்ளது.



இச் சம்பவத்தின் போது உந்துருளியில் பயணித்தவர்கள் சிறு காயங்களுக்குள்ளான நிலையில் கிளி. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். (தீ)

# கணனி கொள்வனவிற்கு த.பு.க.நிதியுதவி

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பருத்தித்துறை தும்பளை என்னும் இடத்தில் அமையப்பெற்றுள்ள சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு கணனிகள் பெற்றுக்கொள்வதற்காக நான்கு இலட்சம் ரூபா நிதியினை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கியுள்ளது.

வித்தியாசாலை அதிபர் மாணவர்களின் கல்விவளர்ச்சியைக் கருத்திற் கொண்டு யாழ். மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினிடம் உதவி கோரியிருந்ததையடுத்து ஜேர்மன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணிப்பாளர் சண்முகரட்ணம் அவர்களால் கடந்த திங்களன்று காலை 10.00 மணியளவில் வித்தியாசாலையின் உப அதிபர் புஸ்பராஜாவிடம் நிதி வழங்கப்பட்டது.

## யாழ். இல். சிறிலங்காப் படையினர்

# பாணுக்குள் மறைத்து வழங்கிய ஆபாசப் படப் பிரதிகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மடத்தடிச்சந்தியிலுள்ள சிறிலங்கா இராணுவ முன்னணிக் காவல் அரணில் கடமையாற்றும் சிறிலங்கா இராணுவத்தினர் ஆபாசப் படப் பிரதிகளை பாணுக்குள் மறைத்து வைத்து இளைஞர்களுக்கு விநியோகம் செய்தவேளை யாழ். பிரதேச கலாச்சாரம் பேணும் குழுவால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டனர்.

இதன் மூலம் யாழ். குடாநாட்டில் சீரழிவு கலாச்சாரத்தை சிறிலங்கா படைகள் முன்னின்று செயறபடுத்தி வருவது சந்தேகத்துக்கு இடமின்றி நிருபணமாகி இருப்பதாக கலாச்சாரம் பேணும்குழு தெரிவித்துள்ளது (28)

# இந்திய வெளியுறவு அமைச்சர் இன்று கொழும்பு விஜயம்

## -உயர்ஸ்தானிகரகம் உறுதி செய்தது

இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர் சிங் இன்று கொழும்பு வருகை தருவார் என இந்திய உயர்ஸ்தானிகராலயம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

முன்னதாக அவரின் விஜயம் இலங்கையின் அரசியல் சூழ்நிலையை காரணம் காட்டி ஒத்திவைக்கப்பட்டதான தகவல் ஒன்றை இந்திய உயர்ஸ்தானிகராலயத் தரப்புகள் வெளியிட்டிருந்தன. இந்த நிலையில் இன்று வரும் நட்வர்சிங் சிறிலங்கா சனாதிபதி பிரதமர், எதிர்கட்சித் தலைவர் மற்றும் வெளியுறவு அமைச்சர் ஆகியோரைச் சந்திக்கவுள்ளார். அவர் எதிர்வரும் 11ஆம் திகதி நாடு திரும்பவுள்ளார். இந்திய சிறிலங்கா கூட்டு ஆணைக் குழுவின் ஆறாவது கூட்டத்தொடரில் பங்குகொள்வதற்காவே அவரின் விஜயம் அமைந்துள்ளது. (32)

### கருணாவின்

ஆகிய போராளிகளே வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

இம்மாவீரர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### தேசிய...

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திடும் முடிவை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கைவிடும் வரை எமது இப்போராட்டம் தொடரும் என்று உண்ணாவிரதம் இருக்கும் பிக்குகள் தெரிவித்தனர்.

### இலங்கைக்கு..

என்பன குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளதாகவும் இராஜதந்திர வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

12 ஆம் திகதி நடைபெறவிருக்கும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள சிறிலங்கா அரசுக்கு அழைப்பு விடுக்கப்பட மாட்டாது எனத் தெரிய வருகிறது.

### பொதுக்...

தோற்கடிப்போம் என்றார் அவர்.

மேலும் பொதுக்கட்டமைப்பு என்பது பல ஆண்டுகாலமாக தமிழீழ விடுதலைப் புலிகள் கோரிவரும் தமிழீழத் தனியரசுக்கான ஒரு நடவடிக்கையே என்றும் அவர் கூறினார்.

### ஐ.தே.

கப்பாடொன்றிற்கு வரும் விடயமல்ல. அது புனர்நிர்மாண மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு அதிகாரிகளுக்கிடையே ஏற்படுத்திக் கொள்ளப்படவுள்ள ஒரு உடன்படிக்கையாகும்.

பாராளுமன்றத்திற்குக் கொண்டு சென்று ஆராயும் அளவிற்கானது அல்ல.

பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கத்திலிருந்து விலகினால் ஐக்கிய தேசியக் கட்சியிடம் ஆட்சியை ஒப்படைக்கவோ, பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டு மீண்டும் ஒரு தேர்தலுக்கு செல்லவோ நான் தயார். அவ்வாறான நிலையில் எதிர்க்கட்சியில் அமரவும் நான்தயார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை நாசமாக்க யாருக்கும் இடமளிக்க முடியாது. எமது கட்சி யாருடைய கைதியாகவும் இருக்கத்தயாரில்லை. நாட்டில் மீண்டும் ஒரு யுத்தம் வெடிக்க இடமளிக்க முடியாது என்றார் அவர்.

பொதுக்கட்டமைப்புக் குறித்தும் தற்போதைய அரசியல் நிலைமை குறித்தும் முதலில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன், சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆலோசனை நடத்தினார்.

பின்னர் அந்தச் சந்திப்பிற்குச் சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அழைக்கப்பட்டார். அவ்விருவருடனும் விவாதித்த பின்னர் இந்தப் பேச்சுவார்த்தைகளில் நிதியமைச்சர் சரத் அமுனுகமவும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

அதன் பின்னரே சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க, தோட்டக் கைத்தொழில் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா, மின்சக்தி பிரதியமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, கப்பல் போக்குவரத்து பிரதியமைச்சர் டிலான் பெரேரா, கிறிஸ்தவ விவகார அமைச்சர் மில்ரோய் பெர்ணான்டோ உள்ளிட்ட இதர அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களுடனும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆலோசனை நடத்தினார்.

இந்தச் சந்திப்பின் போது கருத்துத் தெரிவித்த சில அமைச்சர்கள் பொதுக்கட்டமைப்பை ஜே.வி.பி எதிர்ப்பதனால் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டே இதில் கையெழுத்திடுமாறு கூறினர்.

அதற்குப் பதிலளித்த சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க யார் எதிர்த்தாலும் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் என்றும்,அதனை விரும்பாதவர்கள் அரசாங்கத்தை விட்டுப் போவார்களாயின் போகட்டும் என்று வெகுவிரைவில் அமைச்சரவை மறுசீரமைக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

அரசாங்கத்தைக் காப்பாற்றிக் கொண்டு பொதுக் கட்டமைப்புத் தொடர்பான உடன்படிக்கையில் கைச்சாத்திடக் கூடிய வாய்ப்பு உள்ளதா? என ஆராயுமாறு சில அமைச்சர்கள் சந்திரிகாவிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

பொதுக்கட்டமைப்பிற்கு 80 சதவீத மக்கள் ஆதரவு வழங்கியிருப்பதாக ஆய்வுகளின் மூலம் தெரிய வந்திருப்பதாகவும் சில அமைச்சர்கள் இக்கூட்டத்தில் சுட்டிக்காட்டினர்.

### திருமலையில்...

எதிர்த்து செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புபாராளுமன்ற நடவடிக்கைகளைக் குழப்பியது. அந்த நேரத்தில் ஒரு முடி வெடுக்கப்பட்டு

### பொதுக்கட்டமைப்பை...

ஏற்பாடு செய்துள்ளனர்.தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி நாடு முழுவதும் 20 இலட்சம் துண்டுப் பிரசுரங்களையும் விநியோகிக்க அவர்கள் முடிவு எடுத்துள்ளனர்.

சிறிலங்கா வரலாற்றிலேயே இடம்பெறும் மாபெரும் அரசியல் விழிப்புணர்வு நிகழ்வாக இது அமையும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் கூறினார்.உத்தேசப் பொதுக் கட்டமைப்பில் கைச்சாத்திட எடுக்கப்படும் முயற்சிகளுக்கு எதிராக தாங்கள் எடுக்கவுள்ள முக்கிய முடிவுகள் பற்றி விரைவில் ஊடகவியலாளர் மாநாடொன்றை நடாத்தி மக்களுக்குத் தெரியப்படுச்தவுள்ளதாகவும் அந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

புதன்கிழமை பாராளு மன்ற அமர்வின்போது அரசின் ஒரு தகுதிவாய்ந்த அமைச்சர் ஒருவர் இதுசம்பந்தமாக விளக்கமளிப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது. அதற்கமைய பிரதி அமைச்சர் டிலான் பெரேரா நேற்று ஒரு விளக்கத்தை அளித்தார். அது எங்களுக்குத் திருப்தி இல்லாத காரணத்தினால் மீண்டும் பாராளுமன்றத்தை நாங்கள் குழப்பினோம்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற கட்சித் தலைவர்கள் மாநாட்டில் ஒரு முடிவு எடுக்கப்பட்டது. அந்த முடிவின் பிரகாரம் மீண்டும் பாராளுமன்றத்திலே பிரதிஅமைச்சர் டிலான் பெரேரா ஒரு அறிக்கை வெளியிடும் பொழுது திருகோணமலையிலே தேவைக்கதிகமாக இருக்கின்ற இராணுவத்தினரை படிப்படியாக அகற்றுவதற்கு சனாதிபதி வாக்குறுதி அளித்துள்ளார் என்பதைத் தெளிவுபடுத்தியதைத் தொடர்ந்து எங்களுடைய போராட்டத்தை தற்பொழுது நாங்கள் இடைநிறுத்தி வைத்திருக்கின்றோம் என்றார் அவர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது